Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 28 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 14 (11.06.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 253

**Computer Hardware Work Shop**

ஒருவார கால இலவச கற்கை நெறி

3 ஆவது பிரிவு ஆரம்பம்

- உங்களுக்கான குறுகிய கால பயிற்சி நெறி...
- அதி நவீன கணினிகளில் செய்முறைகள்...
- எமது நிறுவனத்திலேயே தொழில்சார் வசதிகள்...

ஆரம்பம் : 12.06.2006 காலை 10மணி

பதிவுகளுக்கு முந்துங்கள்

CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely
Jaffna.

# படையினர் கிளைமோர் தாக்குதல்; மூத்த தளபதி மகேந்தி உயிரிழப்பு!

## மன்னாரில் ஆழ ஊடுருவும் படையணி கைவரிசை



கிளிநொச்சி

மன்னார் - வெள்ளாங்குளம் பகுதியில் நேற்றுக் காலை இராணுவத்தின் ஆழஊடுருவித் தாக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் - விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும், மன்னார் மாவட்ட முறியடிப்பு நடவடிக்கைத் தளபதியுமான லெப்.கேணல் மகேந்தி உட்பட4 புலிகள் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள துணுக்காய் - வெள்ளாங்குளம் வீதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்ப வம் இடம்பெற்றது.

வெள்ளாங்குளம் - சேவாலங்கா (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் சூட்டில் போராளி உயிரிழப்பு!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான திகிலிவெட்டையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கப்டன் கங்கா எனப்படும் 28வயதுடைய வடிவேல் கங்காதரன் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவர் என விடுதலைப் புலிகள் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியையும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியையும் பிரிக்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பரவலான கிளைமோர் தாக்குதல்கள்!

கிளிநொச்சி

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப்பிரதேசத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவும், நேற்றும் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியினர் கிளைமோர் தாக்குதல்களை பரவலாக நடத்தினர்.

இந்தத் தாக்குதல்களில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வவுனியா - புதூர் பகுதியில் நேற்றுக்காலை 6.20 மணியளவில் ஆழ ஊடுருவும் படையணியி...

அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.


இதனிடையே - முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியில் நேற்றுமுன்தினம் மாலை கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியினர் நடத்திய இந்தத் தாக்குதல், புதுக்குடியிருப்பிலிருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவில் இடம்பெற்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும்

### என்கிறது அமெரிக்கா



கொழும்பு

மீண்டும் யுத்தம் வெடிப்பதை தவிர்க்க கண்காணிப்புக்குழு தொடர்ந்தும் பணியாற்றவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

மத்திய தென்னாசிய விவகாரங்

## இரு தமிழ்ப் பயணிகள்

ஒருவர் உயிரிழந்தார்.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வவுனியா - புதூர் பகுதியில் நேற்றுக்காலை 6.20 மணியளவில் ஆழ ஊடுருவும் படையணியினர் கிளைமோர் தாக்குதலை நடத்தினர்.

வயல் காவலுக்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த நவரட்ணம் சிறிநாகதாசன் (வயது 32) என்பவர் இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்தார்.

இவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில்

# இரு தமிழ்ப் பயணிகள் மூதூரில் சுட்டுக் கொலை!

திருகோணமலை —

திருகோணமலை - மூதூரில் 12 வயதுச் சிறுவன் உட்பட இருவர் இனந்தெரியாத ஆயுதக்குழுவினரால் நேற்றுப் பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நேற்றுப் பிற்பகல் மூதூர் நகரில் இருந்து திருகோணமலைக்கு பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்.

மற்றொரு தமிழ்ப் பயணி படுகாயங்களுடன் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை நோக்கி மூதூர் - மட்டக்களப்பு வீதியில் பஸ் சென்று கொண்டிருந்த பஸ்ஸை மறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் பஸ்ஸில் ஏறி பயணிகளை நோக்கி (10 ஆம் பக்கம் பார்க்க)



களுக்குப் பொறுப்பான அமெரிக்க துணை இராஜாங்க அமைச்சர் ரிச்சட் பௌச்சர் - பி.ரி.ஐ செய்தி நிறுவனத்துக்கு வழங்கியிருக்கும் செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழுவைத் தக்க வைப்பதற்கு, நோர்வேயும் ஏனைய தரப்பினரும் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அமெரிக்கா முழுமையாக ஆதரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

# தொடர்ச்சியான வன்முறைகள் யுத்த சூழலையே உருவாக்கும்!

## சொல்ஹெய்ம் தெரிவிப்பு



ஒஸ்லோ —


சமாதான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேளையில் - தொடர்ச்சியாக வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருவது, யுத்தத்துக்கான சூழலை உருவாக்கலாம் என நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

மன்னார் - வங்காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் மிகவும் கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொலையை யார் செய்தாலும் மிகவும் கொடூரமான செயற்பாடாகும். இந்தச் சம்பவங்களால் சமாதான முன்னெடுப்புக்கள் தோல்வியடையாத போதும், தொடர்ந்தும் எவ்வளவு தூரம் சாத்தியமாகலாம் எனக் கூற முடியாது.

இவ்வாறான சம்பவங்கள் அண்மைக்காலமாக தொடர்ந்து நடைபெற்று வருவதால், (10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை சமாதான முயற்சிகளில் நோர்வே தொடர்ந்தும் ஈடுபடும்!

## விசேட தூதுவர் பௌயர்



ஒஸ்லோ —

இலங்கை சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் அனுசரணையாளர் பணியில் நோர்வே ஈடுபட விரும்புவதாகவும் - ஆனால், சமாதான முயற்சிக்ளை முன்னெடுத்துச் செல்லுமாறு இருதரப்பும் கோரவேண்டியது அவசியமென்றும் நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ பேச்சுக்கள் முறிவடைந்ததை அடுத்து - அனுசரணைப் பணிகளைத் தொடர்வதா என்பது குறித்து நோர்வே மீளாய்வு செய்வதாக அறிவித்திருக்கிறது.

இந்த நிலையில், நேற்று விசேட தூதுவர் ஹன்சன் பௌயர் கருத்துத் தெரிவிக்கையில் -

நாம் இருதரப்புக்கும் உதவத் தயாராக இருக்கிறோம். பேச்சுக்கள் முன்னோக்கிச் செல்வது இருதரப்பினரதும் கைகளிலேயே உள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)




# உலகக் கிண்ணம் - 2006

## போலந்துக்கு அதிர்ச்சியளித்து வெற்றி பெற்றது ஈக்வடோர்!









ஜெல்சென்கிர்சன்—

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாவது ஆட்டம் போலந்துக்கு அதிர்ச்சியாகவும், தென்-அமெரிக்க நாடான ஈக்குவடோருக்கு திருப்தியாகவும் அமைந்துவிட்டது. 2002 உலகக்கிண்ணப் பிரவேசத்தின்பின் இரண்டாவது தடவையாகவும் ஈக்வடோர் 2006 இல் தகுதிபெற்று தன்னை நியாயப்படுத்தியுள்ளது.

போட்டியின் முதல் இருபது நிமிடங்கள் போலந்து ஆதிக்கம் செலுத்தினாலும், டெல்காடோ தலையால் தட்டிக்கொடுத்த பந்தை ரெனாரியோ அதேபாதையில் தட்டி கோலாக்கவே அந்த இருபதாவது நிமிடத்தில் ஆட்டத்தின் போக்கே மாறிவிட்டது.

இதன்பின்னர் முழு ஆட்டநேரமும் ஈக்வடோரின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. இருந்தாலும், போலந்து வீரர்கள் இடைவேளையின் பின்னர் ஆக்ரோஷமாக ஈக்வடோர் பகுதிக்குள் ஊடறுத்து நுழைந்தபோதும், ஈக்வடோர் அணியின் பின் பாதுகாப்பு வளையத்தை தகர்த்து முன்னேறமுடியாதபடி அணித் தலைவர் இவான் ஹூர்டாடோ உட்பட பின்வரிசை வீரர்கள் காப்பாற்றிக்கொண்டார்கள். இருந்தாலும், போலந்து அணியின் முன்வரிசை வீரர்கள் எபி ஸ்மொலாரெக், மசீஜ் ஜூராவ்ஸ்கி இருவரையும் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமானதாகவே ஈக்வடோர் அணியினர் உணர்ந்தார்கள்.

ஆனாலும், ஆட்டத்தின் எண்பதாவது நிமிடத்தில் போலந்துக்கு இன்னொரு அதிர்ச்சியைக் கொடுத்தார் ஈக்வடோர் அணி வீரர் டெல்காடோ.


Substicute ஆக உள்நுழைந்த காவிடெஸ் லாவகமாகத் தட்டிக்கொடுத்த பந்தை நுட்பமாக டெல்காடோ கோலாக்க 2:0 என்றவாறு போலந்தின் தோல்வி உறுதியாயிற்று. ஈக்குவடோர் 3 புள்ளிகளையும் தட்டிக்கொண்டது.

போலந்து கலந்து கொண்ட ஐந்து உலகக்கிண்ணப் போட்டிகளிலும் ஒரு கோல்கூட போடமுடியாதது இந்த ஆட்டத்தில்தான்.

ஈக்வடோர் அணி யைப் பொறுத்தவரை 2002 உலகக் கிண்ணப் போட்டிகளில் குரோஷியாவை 1:0 என்று வெற்றிகண்டபின் பெற்ற அடுத்த வெற்றி இதுவாகும்.

ஈக்வடோர் எதிர்நோக்கும் அடுத்த பாரிய சோதனை இருபதாம் திகதி ஜேர்மனியைச் சந்திக்கப்போவதாகும். அன்றையதினம்தான் அதனைத் தீர்மானிக்கும்.

## பரகுவே அணி வீரரின் கோலால் இங்கிலாந்துக்கு பரிதாப வெற்றி














பிராங்போர்ட் —

ஜேர்மனியில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண உதைபந்தாட்டத் திருவிழாவின் 2ஆம் நாளான நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் பரகுவே அணியை 1:0 என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணி வெற்றிகொண்டது.

நேற்றையதினம் பி பிரிவில் இங்கிலாந்து அணியை எதிர்த்து பரகுவேயும், ரினிடாட் டுபாக்கோ அணியை எதிர்த்து சுவீடனும், சி பிரிவில் ஆஜென்ரீனாவை எதிர்த்து ஐவரிகோஸ்ட் அணியும் மோதின.

இலங்கை நேரப்படி நேற்றுமாலை 6.30 மணியளவில் இங்கிலாந்து - பரகுவே அணிகளுக்கிடையிலான போட்டி ஆரம்பமானது. போட்டி தொடங்கி 3ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அணியின் டேவிட் பெக்காம் அடித்த பந்து பரகுவே அணி வீரர் காலோஸ் கமறாவின் தலையில் பட்டு கோல் கம்பத்துக்குள் சென்றது. இதனால் இங்கிலாந்து அணிக்கு ஒரு கோல் இனாமாகக் கிடைத்தது.

இதன்பின் போட்டியின் ஐந்தாவது நிமிடத்தில் பந்தொன்றைத் தடுக்கமுயன்ற பரகுவோ கோல் காப்பாளர் ஜஸ்ரோ வில்லர் காயமடைந்து வெளியேற அவருக்குப் பதிலாக அல்டோ பொபாடிலா மைதானத்துக்குள் இறங்கினார்.


தொடர்ந்து இங்கிலாந்து அணியின் டேவிட் பெக்காமின் ஆட்டத்தை தடுப்பதில் பரகுவே அணி தீவிரம் காட்டிய அதேவேளை, தமது தரப்பில் கோல் அடிக்கவும் முயன்றனர்.

ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அணியின் வீரர்களை தாக்கி முன்னேறிய பரகுவே வீரர் நெல்சன் வல்டஸ் கோல் அடிக்க முயன்றார். ஆனால், பந்து அகன்று போனதால் கோல் வாய்ப்பு நழுவியது.

இதன்பின் இரு அணிகளும் ஒன்றையொன்று முந்திக்கொண்டு கோலடிக்க முயன்றபோதும் - முதல்பாதி ஆட்டத்தில் எவராலும் மேலதிக கோல்களை அடிக்கமுடியவில்லை.

இந்தநிலையில் 2ஆவது பாதியாட்டமும் விறுவிறுப்பாக தொடர்ந்தது.

ஆனால், கடைசிவரை இரு அணிகளாலுமே கோல் எதனையும் போடமுடியவில்லை. இதனால் இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி 1:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.



உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தை முன்னிட்டு ரசிகர்களின் பார்வைக்காக பிராங்போர்ட் நகரில் பாயும் ஆறொன்றின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள பெரிய திரையொன்றையே படத்தில் காண்கிறீர்கள்.



உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் ஜேர்மனி - கோஸ்டாறிக்கா அணிகளிடையே நடந்த போட்டியில் 6 கோல்கள் அடிக்கப்பட்டன. இது ஒரு புது சாதனையாக அமைந்தது. இதற்கு முன்பு 1930ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் முதல் ஆட்டத்தில் பிரான்ஸ்-மெக்சிக்கோ அணிகள் 5 கோல்களை அடித்திருந்தன.

# யாழ்ப்பாண மக்களை பாதுகாப்பதற்காகவே பொன்சேகாவை இறைவன் காப்பாற்றினாராம்

## என்கிறார் எல்லாவெல மேதானந்த தேரர்



கொழும்பு —

சர்வதேச சமூகம் புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் புலிகளை எப்போது தடை செய்யப் போகிறது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் அனுதாப பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

புலிகளைச் சர்வதேச சமூகம் தடைசெய்துள்ளது. ஆனால் இலங்கை அரசாங்கத்தின் புலிகளுக்கு எதிரான தடை எங்கே என்று கேட்கிறோம்.

ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அனுதாபம் தெரிவிக்கிறோம். அதே வேளை புலிகளால் கொலை செய்யப்பட்ட அமிர்தலிங்கம் தொடர்பான அனுதாப பிரேரணையை நடத்த வேண்டும் என்று கோருகிறேன்.

ஜோசப் பரராஜசிங்கத்தின் குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரை கருணா குழுவோ, இராணுவமோ கொலை செய்யவில்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்ய வேண்டுமானால் படையினருக்கு மட்டக்களப்பு செல்ல வேண்டிய அவசியமில்லை. புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கையை 6 ஆயிரம் தடவைகள் மீறியுள்ளனர்.

புலிகளின் மக்கள் ஆதரவு தொடர்பான வாக்கெடுப்பொன்றை நடத்தினால் புலிகளுக்கு 10 வாக்குகளும் கிடைக்காது.

இன்றைய நிலையில் புலிகள் கொழும்பை முற்றாக அழித்துவிட முயற்சிக்கின்றனர். தமது கொள்கையை மீறுகின்ற எவரையும் புலிகள் கொலை செய்வார்கள்.

புலிகளுக்குச் சார்பான அதிகமான இணையத் தளங்கள் நோர்வேயில் செயற்படுகின்றன. நோர்வே புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றமை தமிழின அழிவுக்கு வழி வகுத்து விடும் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் மக்களின் நிலைமையை எண்ணும்போது வேதனையாக இருக்கிறது. இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா தற்கொலைத் தாக்குதலில் உயிர் தப்பியதும் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். யாழ்ப்பாண தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக இராணுவத் தளபதியை இறைவன் காப்பாற்றியதாக எம்மிடம் கூறினர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பில் வசிப்போரின் விபரங்களை திரட்டுவதற்கு சிங்களத்தில் படிவம்!

கொழும்பு —

கொழும்பில் சில பகுதிகளில் வீட்டிலுள்ளவர்களின் விபரங்களைப் பதிவு செய்து தருமாறு கோரி தனிச் சிங்களத்திலான படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.


நாரஹென்பிட்டிய, தெமட்டகொட உட்பட சில பகுதிகளிலேயே இந்தப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சிவிலுடையில் வரும் பொலிஸார் இந்தப் படிவங்களை விநியோகிப்பதால், மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

தனிச் சிங்களத்தில் படிவங்கள் வழங்கப்படுகின்றமை குறித்து மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான ந.குமரகுருபரன் நாரஹென்பிட்டிய பொலிஸாருடனும், சமாதான செயலகத்துடனும் தொடர்பு கொண்டு வினவியுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தினாலேயே இந்தப் படிவங்கள் வழங்கப்படுவதாக நாரஹென்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்

## என்கிறார் வீரமணி



கொழும்பு —

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசு தயக்கம் காட்டினால் அழுத்தம் கொடுப்போம் என்று திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்தார்.

இது தொடர்பாக சென்னையில் பத்திரிகையாளர்களிடம் அவர் கூறியதாவது -

இலங்கைத் தமிழர் மற்றும் அகதிகள் பிரச்சினைக்குத் தமிழக அரசு மட்டும் தீர்வு காண முடியாது.

மத்திய அரசுடன் இணைந்து தான் இதற்குத் தீர்வு காண வேண்டும். அந்த உணர்வுள்ள தமிழக அரசு தான் இப்போதுள்ளது.

ஆனாலும், இதில் தயக்கம் காட்டினால் எங்களைப் போன்ற தமிழ் இன உணர்வாளர்கள் அழுத்தம் தருவார்கள் எனத் தெரிவித்தார்.

# இந்தியாவின் ஆதரவைப்பெற புதுடெல்கி செல்கிறார் ஜயந்த




கொழும்பு —

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்குப் போட்டியிடும் ஜயந்த தனபால புதுடெல்கிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.நா செயலர் நாயகம் பதவிக்கான தேர்தலில் இந்தியாவின் ஆதரவைத் தனக்கு அளிக்கக் கோரியே ஜயந்த தனபால எதிர்வரும் ஜுலை மாதம் புதுடெல்கிக்குச் செல்லவுள்ளார்.

ஜுலை 3 ஆம் திகதி புதுடெல்கி செல்லும் ஜயந்த தனபால - இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரணையும், வெளிவிவகார இணை அமைச்சர் ஆனந்த் சர்மாவையும் சந்திக்கவுள்ளார்.

# ஒஸ்லோ பேச்சுகள் தோல்வி கலைஞர் கருணாநிதி கவலை



சென்னை —

ஒஸ்லோவில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை இலங்கை அரசாங்கம் முறித்துக் கொண்டமை தொடர்பாகத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலைஞர் கருணாநிதி பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் -

கேள்வி: இலங்கைப் பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகள் அமைதி காப்பதாக பாரதீய ஜனதாக்கட்சி குற்றம் சாட்டியுள்ளதே?

பதில்: இந்தப் பிரச்சினையில் மத்திய அரசுக்கு முரண்பட்ட கருத்து எதுவும் தமிழக அரசுக்கு இருக்காது.

கேள்வி: இலங்கை அகதிகள் முகாமில் வசதிகள் இல்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளதே?

பதில்: அறிக்கை கொடுக்கச் சொல்லியுள்ளேன். ஏற்கனவே தி.மு.க ஆட்சியில் தரப்பட்ட சலுகைகளை அ.தி.மு.க ஆட்சி பறித்துள்ளது. அவர்கள் மருத்துவ கல்லூரிகளில் சேர அனுமதித்தோம். அது அ.தி.மு.க ஆட்சியில் மறுக்கப்பட்டு விட்டது. மீண்டும் அனுமதி கேட்டு கடிதம் எழுதியுள்ளேன். ஆய்வு செய்து வருகிறோம். அவர்களுக்கு தேவையான உரிய உதவிகளை வழங்க முயற்சி மேற்கொள்வோம்.

தேவையானால் மத்திய அரசின் உதவியும் கோரப்படும்.

கேள்வி: விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை, அரசுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளதே?

பதில்: வருந்தத்தக்கது. அவர்கள் தொடர்ந்து பேசி அமைதி காண முன்வந்தால் வரவேற்கத்தக்கது என்றார் கலைஞர் கருணாநிதி.

# முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாவலரின் சம்பளத்தை இடைநிறுத்த நடவடிக்கை!

கொழும்பு —

சந்திரிகாவின் பாதுகாப்பாளருக்கு வழங்கப்படும் 30 லட்சம் ரூபா நிறுத்தப்படுமா? தற்போது லண்டனில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் வழங்கப்படும் 30 லட்சம் ரூபா மிகவிரைவில் இடைநிறுத்தப்படும் என அரச தரப்பு தெரிவித்துள்ளது. (தே)

# இந்திய எண்ணெய் நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் சமரசம்

கொழும்பு —

இந்திய எண்ணெய் நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் நேற்று முன்தினம் சமரசம் செய்து கொண்டது.

அதேவேளை எரிபொருள்துறை அமைச்சர் பௌசியுடனான சந்திப்புக்குப் பின்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற் சங்கத்தினரும் தங்களது போராட்டத்தைக் கைவிட்டனர்.

எண்ணெய் விலையை இந்திய எண்ணெய் நிறுவனம் நிர்ணயிக்கும் முடிவைக் கைவிட வேண்டும் என்று இந்தச் சந்திப்பின் போது தொழிற்சங்கத்தினர் வலியுறுத்தினர். எண்ணெய் விலையை தொடர்ந்து அரசாங்கமே நிர்ணயிக்கும் என்று அரச தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் இலங்கை, இந்திய எண்ணெய் நிறுவனம், எரிபொருள் இறக்குமதிக்கு ஒப்புக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிரந்தர நியமனத்தில் புறக்கணிப்பு

கொழும்பு —

கடந்த ஆண்டு கல்வியியல் கல்லூரி டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்த தமிழ் மொழி மூல ஆசிரிய பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.


2003/2005 அணி ஆசிரியர் பயிலுநர்களுக்கே இந்தத் துரதிஷ்ட நிலை ஏற் பட்டுள்ளது. 2005 டிசம்பர் சகல பயிற்சி பரீட்சைகளையும் பூர்த்தி செய்து, சித்தியும் பெற்றபோதும், நிரந் தர ஆசிரிய நியமனத்தை எதிர்பார் த்து ஆறு மாதங் களாகக் காத்திருக்கின்றனர்.

இவர்கள் தமக்கு இன்னும் நியமனம் வழங்கப்படவில்லையென கவலை தெரிவித்தனர். இதேவேளை 2003/2005 அணி யைச் சேர்ந்த சிலருக்குத் தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் கடந்த ஏப்ரலில் வழங்கப்பட்டது.

இதனால் ஒரேயணியைச்சேர்ந்த ஆசிரியர்களுக்குச் சேவை மூப் புப் பிரச்சினை எழுவதுடன் 6 மாதகால சேவை முறிவும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வற்வரி மோசடியுடன் தொடர்புடையவர்களை கைது செய்து விசாரணை நடத்த வேண்டும்

## என்கிறார் விமல் வீரவன்ச



கொழும்பு —

வற்வரி மோசடியுடன் தொடர்புபட்ட உயர் அதிகாரிகளை கைது செய்து விசாரணை நடத்த வேண்டுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளரும், கொழும்பு மாவட்ட எம்.பி.யுமான விமல்வீரவன்ச நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் கூடிய போது - சபாநாயகரின் அனுமதியுடன் விசேட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

வற்வரி மோசடி மிக மோசமாக இடம்பெற்று வருகிறது. ஊடகங்களின் தகவல்களின் படி 357 கோடி ரூபா வற்வரி மோசடி செய்யப்பட்டுள்ளதாக அறிகின்றோம். சில ஊடகங்கள் இதனை ஆசியாவிலேயே மிகவும் பாரிய மோசடியாக வர்ணித்துள்ளன.

இந்த மோசடி தொடர்பான குற்றவாளிகள் சிலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனாலும், வற்வரி மோசடியுடன் தொடர்புபட்ட உண்மையான அதிகாரிகள் இன்னமும்கைது செய்யப்படவில்லை.

குறிப்பிட்ட அந்த அதிகாரிகள் சிலர் தொடர்ந்தும் பதிவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆகவே தான் அவர்கள் உடனடியாக கைது செய் யப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# வட - கிழக்கில் பின்தங்கிய கிராமங்களில் சூரிய சக்திமூலம் மின்சாரம் வழங்க ஏற்பாடு

கொழும்பு —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மின்சார வசதியின்றி, பின் தங்கிய நிலையில் இருக்கும் கிராமங்களுக்கு சூரிய மின்கலம் மூலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

தேச மற்றும் நிர்வாக அமைச்சு இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள பெருமளவான கிராமங்கள் - மின்சார வசதியின்றி, அபிவிருத்தியடையாமல் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. இந்தக் குறைபாட்டால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காகத் தேச மற்றும் நிர்வாக அமைச்சு சூரிய மின்கலம் மூலம் மின்சாரத்தை வழங்க முன் வந்துள்ளது.

பிரதேச ரீதியாகத் தரவுகள் திரட்டப்பட்டு, பின்தங்கிய கிராமங்கள் இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதுபற்றிய தரவுகளை அனுப்பி வைக்கும் படி வடக்கு - கிழக்கிலுள்ள 72 பிரதேச செயலகங்களின் செயலாளர்களுக்கும் இந்த அமைச்சால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

# புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறி போர்ச்சூழலை உருவாக்குகிறது அரசு!

## -விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

ஒஸ்லோ ——

போர்ச்சூழலை உருவாக்கி விட்டு இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டி பயங்கரவாதிகளாகச் சித்திரிக்கும் நடவடிக்கைகளைத் தொடர்கிறது என ஒஸ்லோ பேச்சுகளின் முடிவில் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு -

தமிழர் தாயகத்தின் 70 வீதமான நிலப்பரப்பை தன்னகத்தே கொண்டு, கடல் பிரதேசத்தையும் தன்னகத்தே கொண்டு, சொந்த சட்டங்கள், சுயாதீன நீதி, நிர்வாகம், காவல்துறை உள்ளிட்ட முழுமையான நிர்வாக அமைப்புடன் அறிவிக்கப்படாத அரசாங்கமாகத் தமிழீழ அரசாங்கம் இயங்குகிறது.

தற்போதைய அமைதி முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்களால் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அரச நிர்வாக கட்டுமானங்களுடனும், நவீன பாதுகாப்பு படையுடனும், தமிழ்த் தேசத்தையும், மக்களையும், தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாத்து வருகின்றனர்.

சிங்களத் தேசத்தினது கொடூர ஒடுக்குமுறைகளை மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக அமைதி வழிப் போராட்டங்கள் மூலம் போராடினர். 2000 ஆம் ஆண்டு ஒரு தலைபட்சமான போர் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவித்தது முதல் தமிழர் தேசத்தில் அமைதியையும் மக்களின் இயல்பு வாழ்க்கையை யும் மீளக் கொண்டுவர வேண்டும் என்று விடுதலைப் புலிகள் விரும்பு கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சாதகமான ஒரு தலைபட்சமான போர் நிறுத்த ஒப்பந்த த்தை இலங்கை அரசா ங்கம் முதலில் நிராக ரித்து, பின்னர் தமது இராணுவச் சம நிலையை மீண்டும் வெளிப்படுத்தி 2001 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு தலைபட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்து, அமைதிப் பேச்சுக்களுக் கான கதவுகளைத் தமிழீழ விடு தலைப் புலிகள் திறந்தனர். அதன் விளைவாக நோர்வே அனுசரணை யுடன் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் போர் நிறுத்த ஒப்பந்தம் உரு வாக்கப்பட்டது.

அதி உயர் பாதுகாப்பு வலயங்களால் இடம்பெயர்ந்தோர் மீளக் குடியேறுதல் உள்ளிட்ட வடக்கு - கிழக்கு மக்களின் அடிப்படை மனிதாபிமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல் உள்ளிட்டவற்றை நிறைவேற்றுவதற்காக இடைக்கால அரச நிர்வாகத்தை உருவாக்க வேண்டும் என்றும் அமைதி முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபாட்டுடனும் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்டு வருகின்றனர்.

போர்க்காலத்தில் பாடசாலைகளில் படையினர் நடமாட்டம் இருந்தது. போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் பாடசாலைகளில் படையினர் நடமாட்டம் அனுமதிக்கப்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபையை அப்போது பதவியிலிருந்த ஜனாதிபதி நிராகரித்த நிலையிலும் பேச்சுக்கள் முறிவடைந்துவிடக் கூடாது என்பதற்காக நெகிழ்வுப் போக்கை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்தனர்.

தமிழர் தரப்பினது பங்கேற்பில்லாமலேயே இலங்கை அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளுக்காக நிதி உதவியை ரோக்கியோ மற்றும் அதற்கு முன்னைய வொஷிங்டன் மாநாடுகளில் கோரியது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடியான பொது மக்களின் வாழ்விடங்கள், பாடசாலைகள் மற்றும் வழிபாட்டு இடங்களிலிருந்து படையினர் வெளியேறத் தவறிவிட்டனர். அதிஉயர் பாதுகாப்பு வலயத்தால் உள்நாட்டிலேயே ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

பாடசாலைகளின் முன்பாக படையினர் நடமாடுவதால், குழந்தைகள் மன உளைச்சலுக்குள்ளாகி உள்ளனர். ஆயுதம் தரித்த ஆண்களால், பெண்கள் உடற்சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இணைத் தலைமை நாடுகள் மற்றும் உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கி, இராணுவச் சமநிலையை மாற்ற உதவினர்.

சர்வதேச பாதுகாப்பு சதிவலையை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் உருவாக்கியது.

இந்த நிலையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை இலங்கை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுக்க பேச்சுக்களை விடுதலைப்புலிகள் இடைநிறுத்தம் செய்தனர்.

2003 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் வர்த்தக கடற்கலன் சர்வதேச கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டு, கடலில் மட்டும் பல்வேறு சம்பவங்களின் போது 23 போராளிகள் கொல்லப்பட்ட போதும் விடுதலைப்புலிகள் பொறுமை காத்தனர்.

விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையிலான பேச்சுக்களை நடத்த இலங்கை அரசாங்கம் முன்வந்த நிலையில் - நாடாளுமன்றம் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதியன்று கலைக்கப் பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளே ஏகப் பிரதிநிதிகள் என்ற தீர்ப்பை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் வழக்கினர். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, அகில இலங்கை தமிழர் காங்கிரஸ், ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ் பிரிவு) ஆகியவை இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இதனை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டுப் பாரிய வெற்றி பெற்றனர்.

20 ஆண்டுகால போரினால் ஏற்கனவே சீர்குலைந்த தமிழரது வாழ்க்கை சுனாமியால் பெரும் பாதிப்புக்குள்ளானது. வடக்கு - கிழக்கு மற்றும் தென்னிலங்கைக்கு சமஅளவில் உதவிகளை வழங்க சர்வதேச சமூகம் முன்வந்தது. வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் விரும்பினார்.

நோர்வேயால் சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பு முன்வைக்கப்பட்டது. அரசியல் அதிகாரங்கள் தொடர்பான குறைபாடுகள் இருந்த போதும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் விடுதலைப் புலிகள் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்தனர். ஆனால், இலங்கையின் நீதி, நிர்வாகத்தால் அந்தப் பொதுக்கட்டமைப்பும் முடக்கப்பட்டது.

இதனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கான சர்வதேச உதவிகள் கிடைக்கவில்லை.

அமைதி முயற்சிகளில் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்களை செயற்படுத்தாத காரணத்தால் 2005 ஆம் ஆண்டு தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்தனர். ஒற்றையாட்சிக்கு அப்பாலான அதிகாரப் பகிர்வை விரும்பாத சக்திகள் வெற்றி பெற்றனர்.

சர்வதேச சமூகத்துக்கு ஒரு நிலைப்பாட்டைத் தெரிவித்துவிட்டு இராணுவ வழித் தீர்வை நடைமுறைப்படுத்தவே இலங்கை ஜனாதிபதி முயற்சிக்கிறார். தமிழ்த் தேசியத்தைச் சீர்குலைக் கும் வகையில் இலங்கை இராணுவம் மற்றும் புலனாய்வு அமைப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் துணை ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தி நிழல் யுத்தத்தை நடத்தி வருகின்றனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள், அப்பாவி பொது மக்களின் படுகொலையின் பின்னால் இலங்கை அரச படையினரே உள்ளனர்.

மக்களின் சுதந்திர நடமாட்டத்தை முடக்கி, எரிபொருள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்டவற்றை தடை செய்து ஒரு போர்ச் சூழ் நிலையை இலங்கை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடியாக இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை போராளிகள் பணிகளை மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவலரண் மற்றும் அப்பாவி மக்கள் குடியேற்றப் பகுதிகளின் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஜெனிவாப் பேச்சுக்களில் தமிழ் மக்களைப் படுகொலை செய்யும் துணை ஆயுதக் குழுவினர், ஆயுதக் களைவு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஆனால், ஜெனிவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் 207 பொதுமக்களும் 20 விடுதலைப்புலிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச சமூகம், சர்வதேச ஊடகம் மற்றும் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ள நிலையிலும், தங்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் துணை ஆயுதக் குழுவினர் இல்லை என்றே இலங்கை அரசாங் கம் கூறி வருகிறது.

நிராயுத பாணிகளாக வந்த படையினர் கப்பலை விடுதலைப்புலிகள் தாக்கியதாக ஒரு பொய்யான தகவலை அரசாங்கம் பரப்பி வருகிறது. கடற் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகள் மீது படைத் தரப்பினர் நடத்திய பதில் தாக்குதலுக்குத் தான் தற்காப்புத் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். படையினரின் கப்பலில் இருந்த கண்காணிப்புக் குழுவினரது உயிருக்கோ, கப்பலில் இருந்த படையினரது உயிருக்கோ ஆபத்தை ஏற்படுத்தும் எண்ணம் விடுதலைப் புலிகளுக்கு இருக்கவில்லை.

2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் திகதி கண்காணிப்புக் குழுவினரால் விடுதலைப் புலிகளின் கடற்படை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கின் கடல் மற்றும் வான் இறைமையானது வடக்கு - கிழக்கு மக்களுக்கானது.

ஜெனிவா 2ஆம் சுற்றுப் பேச்சுக்களுக்கான தளபதிகளின் போக்குவரவு ஒழுங்குகளை ஏற்பாடு செய்யாமல், நிராகரித்தது இலங்கை அர்சாங்கம் .

போர்ச்சூழலை உருவாக்கிவிட்டு முற்றாக விடுதலைப் புலிகள் மீது குற்றம்சாட்டி பயங்கரவாதிகளாக சித்திரிக்கும் நடவடிக்கையைத் தொடருகிறது இலங்கை அரசாங்கம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.




# நன்றி நவிலல்

அமரர்

## இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

(வல்வையூர் சிங்கம் அண்ணா)

மலர்வு 28.08.1932

உதிர்வு 01.06.2006

யாழ்ப்பாணத்திலுள்ள வல்வையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு - 04, பம்பலப்பிட்டி 4 1/2 இல ஆர்தர்ஸ் பிளேசில் வசித்தவரும் ஆர்.வி.ஜி. பீடி ஸ்தாபனத்தின் யாழ் - கொழும்பு உரிமையாளரும் ஆகிய ஸ்ரீமான் இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம் அவர்களின் அமரத்துவச் செய்தி கேட்டு எமது துயரத்தில் பங்கேற்ற உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்களுக்கும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி, தந்தி, பக்ஸ் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும், அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்ட அன்பர்களுக்கும், அன்னாரின் புகழுடம்புக்கு மலர்வளையம், மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அன்னாரின் புகழுடம்பு மயான ஊர்வலம் சென்றபொழுது மலர்தூவி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பித்த சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆர்.வி.ஜி.பீடி நிறுவனம்,
இல:- 58, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி: வை.ரூபசவுந்தரி அம்மாள்,
மகன்கள்: வை.குமாரலிங்கம், வை.சத்தியலிங்கம்,
மகள்: ரேணுகாதேவி,
மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தொலைபேசி : 2596177, 2592934

ஆர்.வி.ஜி. பீடி ஸ்தாபனத்தின் தொலைபேசி : 222 6806.

[C/2295]






# பணியாளர் வெற்றிடம்

1) கணனி இயக்குனர் ஆண், பெண்:

வயது : 20 - 35

தகைமை : கணக்கியல், ஆங்கில அறிவு, கணனி இயக்குவதில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

2) வேலை ஆட்கள்/ வேலை பயிலுனர்

தகுதி : 8ஆம் வகுப்பு கல்வி அறிவு இருத்தல் வேண்டும்.

தகுதி உடையோர் (15.06.06) புதன் கிழமை மு.ப 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

**EUT** (PVT) LTD.
தளபாட விற்பனை நிலையம்
160c, K.K.S Road, CHUNNAKAM.

[C/5388]

# தொண்டர் நிறுவனங்களின் உதவிகள் பாதிக்கப்பட்ட பலருக்கு இல்லை!

## பொது மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினருக்கு இதுவரை எந்த வித உதவித் திட்டங்களும் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குடாநாட்டில் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரியும் பல உள்நாட்டு மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பலவும் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள மக்களுக்கே உதவித்திட்டங்களை வழங்கி வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் பாதிக்கப்படாத பிரதேசங்களில் வசிக்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இந்தத் தொண்டு நிறுவனங்களின் திட்டங்களின்போது புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சில தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களிடம் மதிப்பீடுகளை மேற்கொள்ளாமல் தமது விருப்பப்படி மதிப்பீடுகளை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் மக்களுக்குத் தம்மால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனப் பெயரளவில் கூறுகின்றனரே தவிர, உண்மையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் இந்தத் திட்டங்கள் மூலம் நன்மையடையவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித்திட்டங்கள் முழுமையாக வழங்கப்படவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் செயற்பட்டுவரும் பல தொண்டு நிறுவனங்கள் மக்களுக்குப் பல புனர்வாழ்வு திட்டங்களை மேற்கொள்கிறோம் என அரச அதிகாரிகளுக்கு உறுதியளித்திருந்த போதும், பல நிறுவனங்கள் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலால் தமது பணிகளை நிறுத்திவிட்டு யாழ். குடாநாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித் திட்டங்களை மேற்கொண்டு வரும் உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள், திணைக்களங்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கையில் யாழ். செயலகம் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

அத்துடன், தொண்டு நிறுவனங்கள் தாம் மேற்கொள்ளும் திட்டங்கள் குறித்தோ, திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்தோ மற்றும் திட்டங்களுக்காகத் தாம் செலவிடும் நிதி குறித்த அறிக்கைகளையோ யாழ். செயலகத்துக்கு தெரிவிப்பதில்லை எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

# உள்ளூராட்சி மன்றங்களில் வேலைத் திட்டங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வேலைத் திட்டங்கள் தொடர்பான அனுமதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சி மன்றங்களுக்கும், பிரதம செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பிரமாண அடிப்படையில் ஒதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி, மின்சாரம் வழங்கப்படாத கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கல், சனசமூக நிலையங்களும், சமூக அபிவிருத்தி மையங்களும் விருத்தி செய்தல், வீதிப் புனரமைப்பு, சிறிய பாலங்கள் புனரமைப்பு என்பன இந்த திட்டத்தில் இடம் பெறுவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# கைதடியில் சடலங்களாக மீட்கப்பட்டோரின் வீடுகளுக்கு சென்று படையினர் சோதனை!

யாழ்ப்பாணம்

கைதடிப் பகுதியில் சடலங்களாக மீட்கப்பட்டவர்களின் வீடுகளில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 26 ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கோப்பாய் பகுதியில் புதைகுழியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட கோப்பாய் மத்தியைச் சேர்ந்த வெங்கட கிருஸ்ணசர்மா மற்றும் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் காணாமல் போனவரும் கோப்பாய் பகுதியில் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டு இனம் காணப்பட்ட க.பரணிதரன் என்பவரின் வீடுகளுக்கும் சென்ற படையினர் அங்குள்ளவர்களிடம் மிரட்டும் முகமாகப் பல கேள்விகளைக் கேட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கைதடிப் பகுதியில் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்களைப் பற்றிய விபரங்கள் வெளிவராமல் தடுப்பதிலும் மற்றும் கொலையுண்டவர்களின் உறவினர்கள் கைது செய்தவர்கள் பற்றிய விபரங்களை வெளியிடாமல் தடுப்பதிலும் இராணுவத்தினர் அக்கறை காட்டி செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### கட்டட திறப்பு விழா

வலிகாமம்

வலி. கிழக்கு பிரதேசசபை புத்தூர் தலைமை அலுவலக புதிய கட்டட திறப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் க.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

### நூல்கள் அன்பளிப்பு

சாவகச்சேரி

சாவகச்சேரி நகரசபையின் கீழ் உள்ள சாவகச்சேரி, நுணாவில், மீசாலை ஆகிய நூலக கிளைகளுக்கு மீசாலை வேம்பிராய் வீதியில் அமைந்துள்ள சமய சன்மார்க்க நிறுவனத்தால் பெறுமதி வாய்ந்த இந்து சமயப் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (29)

### கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம்

அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலய புனராவர்த்தன அஸ்டபந்தன நூதன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேக பெருவிழா விஞ்ஞாபனம் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிரதம குரு நயினை சிவஸ்ரீ தைலை வாமதேவ குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

### நாவன்மைப் போட்டி

சரசாலை

சரசாலை இந்துமா மன்றத்தால் நடத்தப்படவுள்ள சைவசமய அறிவு நாவன்மை போட்டிகள் சரசாலை மற்றும் நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆலய பரிபாலனசபை தலைவரும், சமாதான நீதிவானுமாகிய க.சிவசங்கரநாதன் தலைமையில் நடைபெறும்.

### சாவகச்சேரியில் பலாப்பழ சீசன்

சாவகச்சேரி

பலாப்பழ சீசன்களை கட்டியுள்ளதை அடுத்து சாவகச்சேரி சந்தையில் பெருமளவான மக்கள் தினமும் பலாப்பழங்களைக் கொள்வனவு செய்கின்றனர்.

இங்கு விற்பனையாகும் பலாப்பழங்கள் சுன்னாகம், நெல்லியடி, மருதனார்மடம் மற்றும் குடாநாட்டின் ஏனைய சந்தைகளுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

# இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஞானசம்பந்தர் குருபூசை தின விழா

யாழ்ப்பாணம்

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் கைதடி வீரகத்தி விநாயகர் ஆலய அனுசரணையில் நடத்தும் திருஞானசம்பந்தர் குரு பூசை விழா நாளை காலை 9.30 மணிக்கு மேற்படி ஆலயத்தில் இடம் பெறும்.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் சி.மகிந்தினி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் -

ஆசியுரையை கைதடி இணுங்கி கோட்ட கந்தசாமி கோவில் பிரதம குரு சிவ ஸ்ரீ குருசாமி குருக்களும், வாழ்த்துரையை சச்சிதானந்த ஆச்சிரமத் தலைவர் குழந்தை வடிவேல் மற்றும் கைதடி கிராம அலுவலர் அ.செல்வராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

வரவேற்புரையை கைதடி ஸ்ரீ வீரகத்தி பிள்ளையார் ஆலய செயலாளர் இ.சுப்பிரமணியம் நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து சிறப்புரையை கிராம அலுவலர் இரவீந்திரன், சாவகச்சேரி கிராம்புவில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் அ.வாசுதேவா மற்றும் நித்தியதசிதரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : மு.பிரவீன்
முகவரி : வல்வெட்டித்துறை.

அகவை ஒன்று



பெயர் : சு.சுபீட்சா
முகவரி : இத்தாலி.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்

முகவரி

பிறந்த ஆண்டு



கூப்பனுடன் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்

கவிஞர் சோ.பத்மநாதன் எழுதிய நினைவுச் சுவடுகள் நூலின் அறிமுக விழா இன்று காலை 10 மணிக்கு இணுவில் கலை இலக்கிய வட்ட ஆதரவில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - நூலின் ஆய்வுரைகளை நடத்திய ந.சத்தியபாலன், பா.மகாலிங்கசிவம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் விஷேட நிகழ்வாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சங்கீத பூஷணம் எஸ்.குமாரசாமியின் இசை மாலையும் நடைபெறவுள்ளது.

## பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

யாழ்ப்பாணம்

புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் வித்தியாலய ஜோண்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபரும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமாகிய மா.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற இந்தப் புதிய நிர்வாகத் தெரிவில் -

உபதலைவராக பி.றெ.நியூட்டன், செயலாளராக தே.லிவிங்ஸ்டன், உப செயலாளராக ஞா.மேரி ரஜனி, பொருளாளராக லி.நிர்மலன், உப பொருளாளராக சி.சிறிசுதாகரன், சல்வி மேம்பாட்டுப் பொறுப்பாளராக வீ.சாள்டன் குமார், கணக்காய்வாளராக ஜே.கியூ பேட், விளையாட்டுப் பொறுப்பாளராக ஆ.றட்சன் வாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக செ.றெமியூலாஸ், அ.சகாயராஜா, த.கென்றிறீகன், ற.சர்மிளா ஆகியோர் அங்கத்தவர்களால் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் பாடசாலை முன்னேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பூரணை தினவிழா

யாழ்ப்பாணம்

அகில இலங்கை திருமறை கலாமன்றம் வைகாசி மாத பூரணை தினத்தை முன்னிட்டு இன்று மாலை 5.50 மணிக்கு இணுவில் காரைக்கால் சிவன் ஆலயத்தில் பூரணை தினவிழாவைக் கொண்டாடவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆலய பூசையைத்தொடர்ந்து அகத்தியர்தேவாரத் திரட்டு, முற்றோதல், பன்னிரு திருமுறை பாராயணம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

# யாழ்.மாவட்ட பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவி வருவதாக தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்ட புள்ளி விரபங்கள் மூலம் தெரிய வருகிறது.

குறிப்பாக தென்மராட்சி, தீவகம், வடமராட்சி, ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்து வருவதாக இந்தப் பகுதி கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

தற்போது மாணவர்களின் ஆங்கில கல்வி வளர்ச்சி வீழ்ச்சி அடைந்து காணப்படுகிறது. அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 20 வீதமானோரே திறமைச் சித்தியை பெற்றுள்ளார்கள்.

ஏனையோர் சாதாரண சித்தியும், சித்தியின்மையும் பெற்றிருப்பது எமது மாவட்டத்தின் ஆங்கிலக் கல்வியின் தரம் வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவே ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

மேலும் மாணவர்கள் ஆங்கில பாடத்தில் கூடிய கவனம் எடுப்பதில்லை எனவும், அரசாங்கம் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்கிய போதும் மாணவர்கள் ஆங்கில பாடத்தில் கூடிய கவனம் செலுத்தி ஆர்வத்துடன் கற்பதில்லை. மேலும் தமது பிள்ளைகள் ஆங்கில பாடத்தில் கவனம் செலுத்துவதற்கு பெற்றோர்கள் போதிய ஊக்கம் கொடுப்பதில்லை எனவும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் விசனம் தெரிவித்தனர்.

தொடர்ந்து இந்த நிலைமைகள் நீடிக்குமானால் எமது மாணவர்களின் ஆங்கிலக் கல்வியின் தரம் மற்றும் எதிர்கால வேலை வாய்ப்புகள் இழப்பதற்கு ஏதுவாக அமைந்து விடும்.

எனவே, பின்தங்கிய பிரதேசங்களில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு காலக் கிரமத்தில் ஆங்கில ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என் யாழ். அரச, சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# கொலைகளை செய்யும் படையினரிடம் நாம் பாதுகாப்பு கோருவது எப்படி?

## மன்னார் ஆயர் கேள்வி



மன்னார் —

பாதுகாப்புக்கென நிறுத்தப்பட்டிருக்கிறவர்களே படுகொலைகளை செய்துகொண்டிருக்கிறார்கள். பின்னர் அவர்களிடம் நாம் எப்படிப் பாதுகாப்புக் கோர முடியும்? என வங்காலை தோமஸ்புரியில் ஒரு குடும்பம் கோரமாகக் கொல்லப்பட்டது குறித்து மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகை தெரிவித்தார்.

பாதுகாப்பு படைகளிடம் நீங்கள் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரவில்லையா? என பி.பி.சி செய்தியாளர் கேட்டபோதே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்புக்கென நிறுத்தப்பட்டவர்களே இதனையெல்லாம் செய்யும் போது அவர்களிடம் பாதுகாப்புக் கேட்கமுடியாது எனவும் ஆயர் மேலும் தெரிவித்தார்.

வங்காலை தோமஸ்புரி மக்கள் இந்தக் கொலைகளைப் படையினரே புரிந்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே படையினரின் மீதுள்ள அச்சம் காரணமாக அந்தப் பகுதி மக்கள் இரவில் தேவாலயத்திலேயே தங்குவது வழமையாகும். வேலை முடிந்து வீடு திரும்ப நேரமாகியதால் வீட்டில் தங்கிய போதே மூர்த்தி மாட்டீன் குடும்பம் படையினரின் வெறியாட்டத்துக்குப் பலியாகியுள்ளதாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

# உள்ளகப் பாதுகாப்பு படையினர் களமுனை போராளிகளுடன் சந்திப்பு

முல்லைத்தீவு —

லெப். கேணல் அன்பு பயிற்சிப் பாசறையின் இரண்டாவது உள்ளகப் பாதுகாப்பு படை அணியினர் மணலாறு களமுனைக்குச் சென்று போராளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அண்மையில் பயிற்சியை நிறைவு செய்த இந்த அணியினர் பயிற்சி ஆசிரியர் காளி தலைமையில் களமுனைக்கான பயணத்தை மேற்கொண்டனர்.

மணலாறு களமுனையில் மணலாறு பிராந்திய கட்டளைத் தளபதி சித்திராங்கன், தளபதி இளம்புலி, பொறுப்பாளர்களில் ஒருவரான சோபிதன் ஆகியோர் அன்பு பயிற்சி பாசறை அணியினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இனி நடைபெறப்போகும் போரில் விடுதலைப் புலிகளுக்கு எந்த நேரமும் தோள் கொடுத்து, பக்க பலமாகச் செயற்படத் தாங்கள் தயாராக இருப்பதாக உள்ளகப் பாதுகாப்பு படையினர் உறுதி தெரிவித்தனர்.

# ஒஸ்லோப் பேச்சு முறிவுக்கு அரசாங்கமே காரணம்!

## நடேசன் தெரிவிப்பு



ஒஸ்லோ —

ஒஸ்லோ பேச்சுகள் தோல்வியடைந்தமைக்கு அரசாங்கம் தான் காரணம் என்று தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் குற்றம்சாட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்னவுடன் தமிழீழ சமாதான செயலகப் பணிப்பாளர் பேச்சு நடத்த தயாராக இருந்தார்.

ஆனால், அதை நிராகரித்துவிட்டு அரசாங்கக் குழுவினர் முன்னமே ஒஸ்லோவிலிருந்து வெளியேறிவிட்டனர்.

கண்காணிப்புக் குழுவினர் மற்றும் நோர்வே அனுசரணையாளர்களுடன் மட்டுமே நாங்கள் பேச்சுகளை நடத்தினோம்.

நாம் அரசாங்கக் குழுவுடன் பேச்சு நடத்த வரவில்லை. இங்கு வந்த பின்னர் பேச்சுகள் நடத்த அரசாங்கக் குழுவினர் விரும்புவதாகக் கூறினர். அப்படியான நிலையில் எமது சமாதான செயலகப் பணிப்பாளரை பேச்சுக்கு அனுப்ப ஒப்புக் கொண்டோம். ஆனால் அரசாங்கமே நிராகரித்தது.

எம்மீது நோர்வே அனுசரணையாளர்கள் குறை கூறுவது ஆச்சரியமளிக்கிறது. அரசாங்கத்தின் செயற்பாட்டால் தமிழ் மக்கள் அல்ல சிங்கள மக்களும் அதிருப்தியடைந்துள்ளனர்.

அமைதிப் பேச்சுகளினூடாக தீர்வு காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நுண்கலை கல்லூரியில் இன்று முதலாவது தமிழிசை அரங்கு

கிளிநொச்சி —

கிளிநொச்சி நுண்கலை கல்லூரியின் முதலாவது தமிழிசை அரங்கு இன்று மாலை 4 மணிக்கு கிளிநொச்சி நுண்கலை கல்லூரி வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இராசதுரை குழுவினரின் மங்கள வாத்தியம், தலைமை உரை, கல்லூரி மாணவர்களின் இசை, கல்லூரி மாணவி அம்டாவின் வாத்திய இசை, சிறப்பு விருந்தினர் உரை, கௌரவ விருந்தினர் உரை, பரிசில் வழங்கல், கல்லூரி ஆசிரியர்கள் இணைந்து வழங்கும் வாத்திய இசை நிகழ்வு என்பன இடம் பெறவுள்ளன.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக நவம் அறிவு கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் கௌரவ விருந்தினராக, வாணிபர் ஒன்றியத் தலைவர் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்கள் பொதுமக்கள், இசைப்பிரியர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி நுண்கலை கல்லூரியினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# நாம் தாக்கப்பட்டாலும் எமது மருத்துவ சேவை நின்றுவிடாது

## மருத்துவர் வேதநாயகி

கிளிநொச்சி —

பின்தங்கிய பகுதி மக்களுக்கு எம்மால் நடத்தப்படுகின்ற மருத்துவ சேவையை முடக்கும் நோக்குடனேயே எமது வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆனால், அவர்களது நோக்கம் நிறைவேற மாட்டாது என நடமாடும் மருத்துவசேவையை நடத்தும் மருத்துவர் தேவநாயகி தெரிவித்தார்.

கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் கடந்த வியாழக்கிழமை ஆழஊடுருவும் படையணியினரின் கிளைமோர் தாக்குதலில் நடமாடும் மருத்துவ சேவையினரின் வாகனம் தாக்குதலுக்குள்ளானது.

இது தொடர்பாக கருத்துக் கூறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது -

கடந்த 13 வருடங்களாக பின்தங்கிய புதுமுறிப்பு, இரணைமாதா நகர், வெள்ளாங்குளம், தேக்கமாவடி, இலுப்பைக்கடவை, ஜெயபுரம், தேக்கங்கண்டல் பிரதேச மக்களுக்கு மருத்துவ சேவை ஆற்றி வருகிறோம்.

தாக்குதல் சம்பவத்தில் என்னோடு சேர்ந்து பணியாற்றியவர்கள் காயமடைந்தது மிகுந்த துயரம் தருகிறது. ஆனாலும், எமது சேவை நின்றுவிடப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# யோகன் பயிற்சி பாசறையில் 2ஆவது அணிக்கான பயிற்சி







முல்லைத்தீவு —

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவியில் யோகன் பயிற்சிப் பாசறையின் உள்ளகப் பாதுகாப்புப் படையணியின் இரண்டாவது அணிக்கான பயிற்சி நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வு துணுக்காய் பாண்டியன்குளம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவம் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமானது.

பொதுச்சுடரை தளபதி மகேந்தியும், தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும் ஏற்றினர்.

கப்டன் யோகனின் திருவுருவப் படத்துக்கு ஈகச்சுடரை கிராமிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ப.சுஜன் ஏற்றினார். மலர் மாலையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா அணிவித்தார்.

கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையின் இரண்டாவது அணிக்கான பயிற்சியை தளபதி மகேந்தி ஆரம்பித்து வைக்க, பயிற்சிகளை பயிற்சி ஆசிரியர்கள் யாழ்நம்பி, கலைவாணன் ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வில் சிறப்புரையை சோ.தங்கன் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# "முல்லையில் பூத்த மலர்கள்" நூல் வெளியீட்டு விழா!

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் மரணமடைந்த சிறுவர்களின் நினைவாக "முல்லையில் பூத்த மலர்கள்" என்ற புத்தக வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

கள்ளப்பாடு சிறுவர் கழகத் தலைவர் டி.பிரசாந் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் - நூலின் பிரதியை கரைச்சி குடியிருப்பு நட்புறவு வட்டச் சிறுவர் தலைவர் வெளியிட்டுவைக்க, கரைச்சிப் பற்று உதவி அரச அதிபர் க.சோதிநாதன் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து நூலை சிறுவர்கள் வட்டக் கழக உறுப்பினர்கள் வெளியிட்டு வைக்க, வேள்ட் விசன் நிறுவனப் பிரதிநிதிகள் பெற்றுக் கொண்டனர்.

மதிப்பீட்டு உரையை முல்லைத் தீவு மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் க.சரவணபவன் நிகழ்த்தினார். ஏற்புரையை வேள்ட் விசன் நிறுவனத்தின் சிறுவர் நிகழ்சித் திட்ட உத்தியோகத்தர் பாக்கியராஜ் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வுக்கு பெற்றோர்கள், சிறுவர்கள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

# கட்டுமானப் பயிற்சி நிறைவு நிகழ்வு!

வட்டக்கச்சி —

கப்டன் முத்தையன் நினைவாக வட்டக்கச்சிப் பிரதேச நாவல்நகர் அம்புக்குளம் மக்களுக்கான கட்டுமான அடிப்படைப் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பயிற்சி ஆசிரியர் நாவேந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பயிற்சியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆய்வு மையப் பொறுப்பாளர் கவியழகன் ஏற்றினார். தேசியக் கொடியை வட்டக்கச்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சுரேன் ஏற்றினார்.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

## மருத்துவ முகாம்

கிளிநொச்சி —

தமிழீழ சுகாதார சேவையினரால் கடந்த 31 ஆம் திகதி நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் பொது மருத் துவ சிகிச்சை, பற்சிகிச்சை, சுதேச மருத்துவ சிகிச்சை, கண்பரிசோதனை போன்ற சிகிச்சைகள் நடத்தப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏராளமான மக்கள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
நட்பிற்கு வீற்றிருக்கை யாது எனின் கொட்புஇன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

- திருக்குறள்

## நமது நோக்கு

# போலி சமாதானத்தின் முடிவு

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஒஸ்லோவில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் முறிவடைந்திருக்கிறது.

இந்த முறிவின் காரணமாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் எதிர்காலம் மட்டுமன்றி நோர்வேயின் அனுசரணைப் பணியும் தொடருமோ என்ற கேள்வி உருவாகியிருக்கிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட ஒஸ்லோ சந்திப்பு அரச தரப்பின் வெளியேற்றத்தால் அரை நாளிலேயே முறிவடைந்திருக்கிறது.

ஒஸ்லோ கூட்டம் அரசு - புலிகள் சந்திப்பாக நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படாவிடினும் கூட அரச தரப்பு அதை பேச்சுக்களமாக்க முனைந்தது.

இதற்கு நோர்வே அரசும் இணங்கி ஏற்பாடுகளைச் செய்தது. புலிகளும் தமது பிடியில் இருந்து இறங்கி - சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனை பேச்சுக்கு அனுப்ப இணங்கினர்.

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தலைமையிலான குழுவுடன் புலிகளும் சம அந்தஸ்துடைய சமாதான செயலக பணிப்பாளரைப் பேச்சுக்கு அனுப்ப இணங்கியபோதும் அதற்கு அரச தரப்பு மறுத்து விட்டது.

புலிகளுடன் பேச்சு நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று அரசு கருதியிருந்தால் பாலித கொகன்னவுடன் அரச உயர்மட்ட அமைச்சர்கள் யாரையாவது அனுப்பியிருக்கலாம்.

அப்படிச் செய்யத் தவறிய அரசு புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன்தான் பேச்சு நடத்துவோம் என முரண்டு பிடித்துக் கொண்டு நோர்வே தரப்புடன் கூட பேச்சு நடத்தாமல் வெளியேறியிருக்கிறது.

ஒஸ்லோ பேச்சிலிருந்து அரச தரப்பு ஒரு தலைப்பட்சமாக வெளியேறியதை விடுதலைப் புலிகள் கடுமையாக கண்டித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த நினைப்பதெல்லாம் அவர்களைப் பொறிக்குள் மாட்ட வைப்பதற்காகவே. எப்படியெல்லாம் புலிகள் மீது களங்கம் கற்பிக்கலாம், பயங்கரவாதிகளாகப் பட்டம் கட்டலாம் என்றுதான் அரசு கனவு கண்டு கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் - எப்போதுமே சமாதான முயற்சிகள் வெற்றி பெறாது. பேச்சுகள் என்பது விட்டுக் கொடுப்பு, இணக்கப்பாடு, மதித்து நடத்தல் என்று படிப்படியான கட்டங்களினூடே நகர்த்தப்பட வேண்டும்.

ஆனால், சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களிடம் இவை ஒருபோதுமே இருந்ததுமில்லை. இத்தகைய அணுகுமுறையுடன் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க முயன்றதும் இல்லை.

ஒரு புறத்தில் கையைக் கொடுப்பதும், மறுபுறத்தில் காலை வாரிவிடுவதும் தான் சிங்களப் பேரினவாதிகளின் வரலாறே எம்முன்னே விரிந்து கிடக்கிறது.

ஒஸ்லோவில் புலிகள் நேரடிப்பேச்சுக்கு இணங்கவில்லை என்று கூறிக்கொண்டு - பேச்சுக்கள த்தில் இருந்து தானே விலகிப் போய்விட்ட அரசதரப்பு பொய்ப்பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக புலிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.


இதிலிருந்து அரசு ஒஸ்லோவுக்குப் பேச்சு நடத்தும் தயார்படுத்தல்களுடன் செல்லவில்லை என்றும் - புலிகளுக்கு ஒஸ்லோவில் வைத்து அவமானத்தை ஏற்படுத்தவே முயற்சிப்பதும் தெளிவாகத் தெரிகிறது.

முன்னர் சமாதானப் பேச்சுகள் தோல்வி கண்டபோதும் - போர் நிறுத்த உடன்பாடு மட்டும் ஏதோ வகையில் நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால், இப்போது அரச தரப்பில் நடவடிக்கையை அடுத்து என்ன நடக்குமோ என்ற நிலை உருவாகி வருகிறது.

ஒஸ்லோவில் தமிழ்ச்செல்வன் கூறியிருப்பது போலவே - புலிகளுக்கு இனிமேல் தீர்க்கமான முடிவை எடுக்கும் காலம் நெருங்கிவிட்டது என்பது உண்மையே. ஏனெனில் போலியானதும், படுகொலைகளும், நிம்மதியற்றதுமான சமாதானம் தமிழ் மக்களுக்கு தேவையில்லை என்ற நிலை உருவாகி விட்டது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு!

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு —

கொழும்பு நகரினதும் சுற்றுப் புறங்களினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கேந்திர நிலையங்களில் 24 மணி நேர பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும்போதே பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராகம மஹபாகே வீதி, வெலிசறை கடற்படை முகாமுக்கருகில் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலுக்கு உடந்தையாக இருந்த நபரும், தாக்குதலில் காயப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர் தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவருகின்றார். இந்த நபர் குறித்து பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் தர வேண்டும்.

அவர் மேலும் கூறியதாவது -

வெலிசறைப்பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் கடற்படையினரை இலக்கு வைத்தே நடத்தப்பட்டுள்ளது. ஆனால், தெய்வாதீனமாகக் கடற்படை பஸ்வண்டி வழமையான நேரத்துக்குச் செல்லவில்லை. கடற்படை பஸ்வண்டி கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தால் பாரிய உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும். ஆனால், இந்த கிளைமோர் தாக்குதலுக்கு இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸே சிக்குண்டது. இதில் பஸ் சாரதியும், நடத்துநரும் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து பொலிஸார் துரித விசாரணைகளில் ஈடுபட்டு - சந்தேகத்தின் பேரில் பலரை கைது செய்து விசாரணையின் பின்பு விடுதலை செய்தனர். 20இற்கும் அதிகமானோரிடமிருந்து வாக்குமூலங்களும் பெறப்பட்டுள்ளன. மேற்கு மாகாண வடபிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பிரதாப்சிங்க தலைமையிலான விசேட குழு இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதோடு சி.ஐ.டியினரும் தனிப்பட்ட முறையில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்புக்கு அண்மித்த பகுதியில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து கொழும்பு தலைநகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, முக்கிய கேந்திர நிலையங்களுக்கும் 24 மணி நேர பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை 119 என்ற இலக்கத்துக்குப் பொதுமக்கள்தகவல்களை வழங்கி வருகின்றனர். எனினும் இதில் 40 வீதமானவை தவறானவையாகக் காணப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாண பிரபாகரனை நேரில் சந்திக்க தயார்

## என்கிறார் மகிந்த

கொழும்பு —


வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வை எட்டுவதற்கு பிரபாரகரனை நேரில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கு தயாராக உள்ளேன் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். தென்னாபிரிக்க அரச சமாதான நடவடிக்கைக்குப் பொறுப்பாகச் செயற்படும் சர்வதேச விசேட பிரதிநிதிகளுடன் மகிந்த ராஜபக்ஷ நடத்திய கலந்துரையாடலி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமாதான நடவடிக்கைகளை பயனுள்ள வகையில் தொடக்குவதன் பொருட்டு அதனோடு தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் அணி திரட்டவுள்ளேன் என்றார்.

இதேவேளை கலந்துரையாடலின் போது தென்னாபிரிக்க அரச சமாதான நடவடிக்கையின் பிரதிநிதிகள் இந்தச் சமாதான பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிகளும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். (தே)

# பேராசிரியர் துரைராசா; ஒரு மகாநுபவம்



நிறைஞ்ச மனசு, நிறைஞ்ச அறிவு, நிறைஞ்ச உணர்வு, அறிவும் மனதும், சொல்லும் செயலும் நிறையாய் இணைந்த செயல் துணிவு, பொது புலமையாளர் என சமூக முக்கியத்துவம் பெறும் எண்ணக்கருவாக்கத்துக்கு எங்கள் புலத்து அர்த்தம் சொன்ன ஆளுமை.

இத்தனைக்கும் சொந்தகாரனாய், எங்கள் கல்வி வரலாற்றில் ஒரு நட்சத்திரமாய் விளங்கியவர் துணை வேந்தர் பேராசிரியர் அ.துரைராசா.

அவரது வாழ்வும், அவர் பற்றிய நினைவுகளும் எங்களுக்குள் உணர்த்தி நிற்கின்ற பாடங்கள் உன்னதமானவை. பேராசிரியருடன் வாழக்கிடைத்த அந்த பொழுதுகள், பல்கலைக்கழக சுவர்களுக்கு அப்பால் அறிவை சமூகப் பயனாக்கிய ஒரு மகாநுபவம்.

மண்பொறியியல் உயர் கண்டுபிடிப்புகளைத் தந்த விஞ்ஞானி. வெறும் மண் ஆய்வாளராக முடிந்து போகாமல் மக்களை மேம்படுத்தும் சமூகப் பொறியியலாளராக விளங்கிய தன்மையினால் தான் எல்லா நல்ல மனங்களினதும் அன்புக்குரியவராகிறார். நினைவில் நிலைத்து நிற்கிறார்.

1934 நவம்பர் 10ஆம் நாளில் யாழ்ப்பாணத்தின் மரபு வழி கிராமமான இமையாணனில் அழகையா - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனாக அவர் வரவு. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, ஹாட்லிக்கல்லூரி ஆகியவற்றில் பள்ளிபடிப்பு. இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதல் தரபட்டம். உலகப் புகழ்பெற்ற கேம்பிறிச் பல்கலைக்கழத்தில் புகழ் பூத்த பேராசிரியர் கே.எச்.ரொங்கோ வழிகாட்டலில் கலாநிதி பட்டம். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகத் தொடங்கி பேராசிரியர், பீடாதிபதி என தடம் பதித்து நிறைவாக எங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு மகுடமானவர் இவர். 12 ஆண்டுகள் ஓடிவிட்ட நிலையிலும் அவரது நினைவுகளின் கனம் இன்னமும் அப்படியேயுள்ளது. எங்களது பல்கலைக்கழ கமும், எங்களது தேசமும் எதிர்கொள்ளுகிற என்றுமில்லாத வாறான நெருக்கடிகளில் அவரது நினைவுகள் தருகின்ற பலம் மிகமிக பெறுமதியானது.

## இன்று 12ஆவது சிரார்த்ததினம்

அனைத்து வகையான அநீதியான மேலாண்மைகளையும், தட்டிக்கேட்கின்ற மனித, சமூக உரிமைகளின் பெறுமதியை காக்கின்ற பொது புலமையாளர்களின் பெருக்கத்துக்கு பேராசிரியர் துரைராசா அவர்களின் தரிசனம் என்றென்றும் ஆதர்சமாவது.

- பேராசிரியர் - என்.சண்முகலிங்கன்.

# விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள இலங்கை அரசாங்கத்தால் முடியுமா?

இலங்கை அரசு தனது கடற்படையின் பலவீனங்களைச் சீர்செய்யும் முயற்சியில் மிகத் தீவிரமாக இறங்கியுள்ளது. இதன் முதற்கட்டமாக நவீன ஆயுதங்களையும், கடற்கலங்களையும் கொள்வனவு செய்யும் அதேவேளை உலகின் முன்னணி கடற்படை அதிகாரிகளை வரவழைத்து ஆலோசனைகளையும் பெறுகிறது.

கடந்த வாரம் இங்கிலாந்து, அமெரிக்கா கடற்படை அதிகாரிகளின் வருகையும் அதன் பின்னரான நிகழ்வுகளும் முக்கியமானவை.

பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜொனாதன் பன்ட் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதியைச் சந்தித்ததுடன் திருமலை துறைமுகத்துக்கும் விஜயம் செய்து களநிலைமைகளைப் பார்வையிட்டார்.

இஸ்ரேல் தயாரிப்பான அதிவேகத் தாக்குதல் படகில் ஏறி உள் துறைமுகப் பகுதிகளைப் பார்வையிட்டதுடன், துறைமுகத்தின் எதிரேயுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சம்பூர் பகுதிகளையும் படகில் இருந்து பார்வையிட்டுள்ளார். சீனன்குடா கடற்படைத்தளத்துக்குச் சென்று அங்கு கடற்படையின் விசேட கடல் அதிரடிப்படையினருடனும் கலந்துரையாடினார்.



1941 - 1944 வரையான இரண்டாம் உலகப்போர் காலப்பகுதியில் தென்கிழக்கு ஆசியாவின் கடற்படைத் தலைமையகமாக திருமலை விளங்கியபோது, அதன் உயர்நிலை கடற்படை அதிகாரியாக அட்மிரல் லூயிஸ் மவுன்பட்டன் பணியாற்றி இருந்தார். இவர் தற்போதைய இங்கிலாந்து மகாராணி எலிசபெத்தின் கணவர் பிலிப்பின் மாமனாராவர். இவருக்கு பின்னர் இலங்கை வந்த உயர்நிலை கடற்படை அதிகாரியே அட்மிரல் ஜொனாதன் பன்ட் ஆவார்.

இதே காலப்பகுதியில் இரு அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்து காங்கேசன்துறை கடற்படைத்தளத்தைப் பார்வையிட்டதுடன் பாதுகாப்பு ஆலோசனைகளும் வழங்கிவிட்டுச் சென்றுள்ளார்கள்.

இப்படிப்பட்ட ஆலோசனைகள் சிங்கள தேசத்துக்கு வழங்கப்படுவது இது ஒன்றும் புதியதல்ல. 1985இல் இஸ்ரேலின் மொசாட் அமைப்பாலும், 1995இல் இந்தியாவாலும், 1999இல் அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளினாலும் பாதுகாப்பு மற்றும் விடுதலைப் புலிகளை முறியடிப்பது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப் பட்டிருந்தன. ஆனால், அவை எதுவுமே களநிலைமைகளை மாற்றவில்லை.

யாழ்.குடாநாட்டிலுள்ள 40 ஆயிரம் படையினரும், யாழ்.குடாநாட்டை தக்க வைப்பதற்காக தெற்கிலும், வெளியுலகிலும் மேற்கொள்ளப்படும் பிரசாரம் தான் அரசின் தற்போதைய முக்கிய கவனம்.

2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் ஆயிரத்து 325 படையினரை ஏற்றிக்கொண்டு திருமலையில் இருந்து காங்கேசன்துறை சென்ற சரக்குக்கப்பல் கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது. அதிஷ்டவசமாக இந்தக் கப்பல் சர்வதேச கடற்பரப்பை நோக்கி ஓடித் தப்பிக்கொண் டாலும், இரு டோராப்படகுகள் மூழ்கிப்போயின.

அதாவது 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தான் 2001ஆம் ஆண்டு வரை யாழ்.குடாநாட்டைத் தக்க வைத்திருந்தது அரசு.

ஆனால், போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி மிக இலகுவாக நான்கு வருடங்கள் குடாநாட்டை தக்கவைக்க முடிந்துள்ளது.

மீண்டும் ஒரு போர் தொடங்குமானால், யாழ்.குடாநாட்டைத் தக்கவைப்பதென்பது இயலாத காரியம். தினந்தினம் குடாநாட்டில் நிகழும் தாக்குதல்களும், கடந்த மாதம் 11ஆம் திகதி நிகழ்ந்த கடற்சண்டையும் இதையே கட்டியம் கூறுகின்றன.

சிங்களத்தின் விமானப்படை மூலம் வழங்கலோ அல்லது படையினரை வெளியேற்றுவதோ இயலாது. 1995 இல் மிகப்பெரும் எதிர்பார்ப்புடன் சோவியத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 6 அன்ரனோவ் 'ஏஎன் - 32' இராணுவச் சரக்கு விமானங்கள் சிங்கள அரசுக்கு பேரழிவையே கொடுத்திருந்தன. 4 அன்ரனோவ் 'ஏஎன் - 32' விமானங்களையும், வாடகைக்கு பெறப்பட்ட ஒரு அன்ரனோவ் 'ஏஎன் - 24' விமானத்தையும் அதனுடன் 180 இற்கு மேற்பட்ட விமானிகள் மற்றும் முப்படையினரையும் இழந்தது அரசு.

இப்போது ஒரு சில அன்ரனோவ் 'ஏஎன் - 32' விமானங்களுடன், 1999 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பிரிட்டனிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மூன்று ஹேர்குலிஸ் சரக்கு விமானங்களும் உள்ளன.

ஆனால், ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளில் நடக்கும் போர்களில் ஹேர்குலிஸ் விமானங்கள் கணிசமான அளவில் விபத்துக்களி னாலும், தாக்குதல்களி னாலும் வீழ்ந்து நொருங்கியமை உக்கிரபோரின் போது அதன் பயன்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது.


தற்போது அரசிடம் உள்ள ஒரே ஒரு மாற்றுவழி கடல் வழங்கல் பாதையை பாதுகாப்பதும், அதன் முக்கிய கடற் படைத்தளங்களான காங்கேசன்துறை, திருமலைத் துறைமுகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் தான்.

காங்கேசன்துறை துறைமுகத்தை பொறுத்தவரை விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினால் அதன் முழுமையான செயற்பாடு இழந்தே காணப்படுகிறது. ஆனால், இதுவே முக்கிய வழங்கல் துறைமுகமாகும்.

1994இல் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்துத் தகர்க்கப்பட்ட அபிதா கட்டளைக்கப்பல், 1995 இல் மூழ்கடிக்கப்பட்ட எடித்தாரா கட்டளைக்கப்பல், அதன்பின் கடற்கண்ணிவெடியில் சிக்கி துறைமுக வாயிலில் மூழ்கிப்போன சீடான்சர் பயணிகள் கப்பல் என்பன துறைமுகத்தின் நுழைவாயிலின் பெரும்பகுதியை மூடியபடியே மூழ்கிப்போயுள்ளன. அதாவது ஒரே நேரத்தில் ஒரு கப்பலே துறைமுகத்தினுள் பிரவேசிக்க முடியும். மேலும், அவசர நடவடிக்கைகளுக்காக மிகப்பெரும் கப்பல்களை துறைமுகத்தினுள் கொண்டு செல்ல முடியாது.

களநிலைமை பாதகமானால் குடாநாட்டில் உள்ள படையினரைப் பெருமளவில் வெளியேற்றுவதும் முடியாத காரியம். மேலும், ஒரு கப்பல் மூழ்குமாக இருந்தால் துறைமுகத்தின் பாவனை முற்றாக நின்று போகும்.

எனவேதான், தற்போது அவசர அவசரமாக மூழ்கிப்போன கப்பல்களை அகற்றுவதற்கும், துறைமுகத்தை சீர் செய்யவும் நெதர்லாந்து, இந்திய நிறுவனங்களின் உதவியைப் பெற அரசு முயற்சி எடுத்துள்ளது.



அத்துடன் டோராக்களை ஆயுத வலிமையில் நவீன மயப்படுத்தும் திட்டத்தில் முக்கிய கவனம் எடுத்துள்ளது. அதாவது அதில் உள்ள 2ஆயிரம் மீற்றர் தூரவீச்சு கொண்ட 23 மீ.மீ பீரங்கிகளுக்கு பதிலாக 3 ஆயிரம் மீற்றர் தூர வீச்சுடைய 30 மீ.மீ பீரங்கிகளைப் பயன்படுத்துவதற்கு முனைந்துள்ளது.

ஆனால், பொருத்தப்படும் 30 மீ.மீ பீரங்கி - களத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரப்போவதில்லை.

ஏனெனில், கடந்த மாதம் வடமராட்சி கிழக்கில் நிகழ்ந்த கடற்சண்டையில் பேர்ள்குரூசர் - II பயணிகள் கப்பலுக்குப் பாதுகாப்பாக நான்கு டோராக்களுடன் ஒரு அதிவேக பீரங்கிப்படகும் பயணித்தது.

இந்தப் படகானது - இரண்டு 8 ஆயிரத்து 500 மீற்றர் தூரவீச்சுக்கொண்ட 37 மீ.மீ பீரங்கிகளையும், இரண்டு 25 மீ.மீ பீரங்கிகளையும் ,இரண்டு 14.5 மீ.மீ பீரங்கிகளையும் கொண்டது. தூர வீச்சுத்தான் முக்கிய காரணி எனில், இந்தக் கலத்தினாலும் அதன் 37 மீ.மீ பீரங்கியாலும் சண்டையை விரைவில் முடித்து கடற்புலிகளுக்கு பேரழிவை ஏற்படுத்தி இருக்கலாம். ஆனால், களநிலைமை கடற்படைக்குப் பாதகமா கவே இருந்தது.

எனினும், ஒரு பெரும் போருக்கு தன்னைத் தயார்ப்படுத்துவதிலேயே தற்போது அரசின் முழுக்கவனமும் உள்ளது. ஒரு விடுதலைப் போரை பொறுத்தவரை மூன்று கட்டங்கள் முக்கியமானவை.

பாதுகாப்பு கட்டமைப்பை ஏற்படுத்துதல். அதாவது -

எதிரியின் முகாம்களை அழித்தல், இராணுவ முன்னேற்றங்களை தடுத்தல், தங்களின் பிரதான தளப்பகுதியை நிறுவுதல், அதன் பாதுகாப்பை வலுப்படுத்துதல் என்பன இதில் அடங்கும். அதாவது - ஒரு நீண்ட போருக்கான வலுவான பின்தளப் பகுதியை ஏற்படுத்துதல் ஆகும். 1983 தொடக்கம் 1990 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் நடைபெற்ற ஈழப்போர் தான் இந்த முதல் கட்டமாகும்.

இரண்டாவது கட்டமானது சமநிலையை எட்டுதல் ஆகும்.

இதில் எதிரிப்படைக்கு பேரழிவை ஏற்ப டுத்தி அவர்களின் வலிமையை குறைத்து, தமது படை வலிமையை அதிகரிப்பதன் மூலமும் இராணுவச் சமநிலையை அடைதல் இராணுவ சமநிலையாகும்.

மக்களை போருக்கு தயார் படுத்துதல், மக்களிடம் அரசியல் முதிர்ச்சியை ஏற்படுத்தல், சர்வதேசத்தில் போராட்டத்தின் தேவையை உணர்த்துவதன் மூலம் ஓர் மாற்றத்தை ஏற்படுத்துதல் என்பன அரசியல் சமநிலையாகும்.

இது 1990 ஆம்ஆண்டுகளின் பிற்பகுதி யில் இருந்து 2001 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி வரையான ஈழப்போர்க்காலமும், 2002 ஆம் ஆண்டில் இருந்ததான சமாதானக் காலப் பகுதியுமாகும். இந்தக் காலப்பகுதி தான் இறுதிக் கட்டத்துக்கான தயார்படுத்தலுக்கான காலமுமாகும்.

இறுதி - இலக்கை அடைதல். இறுதித்தாக்குதல் மூலம் பெரும் நிலப்பகுதியை கைப்பற்றுதல், எதிரியின் போரிடும் வலுவை அழித்தல், ஜனநாயக அரசை நிறுவுதல் ஆகியன மூன்றாவது கட்டமாகும்.

அதாவது தமிழீழப் போராட்டம் இப்போது மூன்றாவது கட்டத்தின் வாசலில் நிற்கின்றது.

அதைத் திடமாக உணர்ந்த சிங்கள அரசும் - புலிகளின் இராணுவ அரசியல் சமநிலை களை தகர்க்கும் முயற்சியிலும் தன்னைப் பலப்படுத்தும் முயற்சியிலும் தீவிர மாக இறங்கியுள்ளது. அதன் முக்கியஅம்சமாக - தனது துணை ஆயுதக் குழுக்களின் பெயரில் நிழல் போரையும் சர்வதேசத்தில் பொய் பரப்புரைகளையும் மேற் கொள்ளும் அதேசமயம் கடற் படையையும் துறைமுகங் களையும் பலப்படுத்தவும் முனைந்துள்ளது.

ஆனால், இவற்றின் மூலம் மிகப்பெரும் தடைகளை எல்லாம் தகர்த்து ஒவ்வொரு கட்டத்தையும் நேர்த்தியாக நகர்த்திய விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள அரசால் முடியுமா என்பது மிகக்குறுகிய காலத்தில் தெரிந்துவிடும்.

*நன்றி - இணையத்தளம்.*

# மண்ணெண்ணெய் தட்டுப்பாடு; ஆழ்கடல் மீன்பிடி பாதிப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு காரணமாக மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை இடைநிறுத்தியுள்ளனர்.

இதனால் மீனவ குடும்பங்களின் நாளாந்த வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர் சங்கப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

கடந்தசில வாரங்களாக யாழ். குடாநாட்டில் மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருகிறது. அத்துடன், மண்ணெண்ணெயின் விலையும் அதிகரித்துள்ளது.

இதனால் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதை நிறுத்தியுள்ள மீனவர்கள் - கட்டுமரங்களில் மிகக் குறுகிய கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மண்ணெண்ணெயை அதிக விலை கொடுத்து வாங்கி தொழிலில் ஈடுபடுவதில் எந்த இலாபமும் இல்லாததையடுத்தே - ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லாதிருப்பதாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டமீன்பிடிப்படகுகள்மண்ணெண்ணெய்யின்றி இயக்க முடியாத நிலையில் கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை,ஆழ்கடல் மீன்பிடித் தொழில் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் யாழ். குடாநாட்டில் மீனின் விலை அதிகரித்துள்ளதுடன், மீனுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 377 வீடுகள் அமைக்கப்படும்

## யாழ். செயலக அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கடந்தகால யுத்த அனர்த்தத்தின்போது வீடுகளை இழந்தவர்களுக்கு உலக வங்கியின் உதவியுடன் 377 வீடுகள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீடுகளுக்கும் 2 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சங்கிலியன் தோப்பு, வண்ணார்பண்ணை, கொக்குவில் கிழக்கு, வண்ணை வடமேற்கு, கோண்டாவில் மத்தி ஆகிய ஐந்து கிராமங்களில் இந்த வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், மூன்று கட்டங்களாக வீடமைப்புக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யுனெஸ்கோவின் பணிப்பாளர் பதவிக்கு சந்திரிகா போட்டி!

கொழும்பு —



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஐக்கிய நாடுகள் கல்வி, கலாசார அமைப்பான யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடவுள்ளதாக லண்டன் தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் பதவிக்கு போட்டியிடுவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக இலங்கையிலுள்ள தனக்கு வேண்டியவர்களுக்கு சந்திரிகா குமாரதுங்க தெரியப்படுத்தியுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# வெள்ளவத்தையில் நேற்று வயோதியர் சுட்டுக்கொலை!

கொழும்பு —

கொழும்பு-வெள்ளவத்தையில் நேற்றுமாலை வயோதிபர் ஒருவர் இனந்தெரியாத இளைஞரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். படுகொலை செய்யப்பட்டவர் 70 வயது மதிக்கத்தக்கவர் என்றும் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்

நேற்று மாலை 6.55 மணியளவில் வீதியால் நடந்து சென்ற வயோதிபர் மீது இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்றதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு-தெற்கு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்தார். இவரது நெஞ்சுப்பகுதியில் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் —

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை ஹென்றி டுணான்ட் மண்டபத்தில் சங்கத் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (21)

# சிப்பாய் காயம்

திருகோணமலை —

திருகோணமலை - கந்தளாயில் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் காலை மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டது.

கந்தளாய்-தம்பலகாமத்தில் தேடுதலில் ஈடுபட்ட படையினர் மீதே இந்த மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இந்தத் தாக்குதலை தாம் முறியடித்துவிட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

# உலக வங்கியின் நிதியுதவியுடன் கிரவல் வீதிகள் புனரமைக்க திட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் தார் வீதியாக இருந்து கிரவல் வீதியாக மாறிய சகல வீதிகளும் உலக வங்கியின் நிதியுதவியுடன் புனரமைக்கப்படவுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் பிரதேச சபைகளின் பராமரிப்பில் இருந்து வந்த பெரும்பாலான தார் வீதிகள் கடந்த கால யுத்த சூழல், போதிய பராமரிப்பின்மை, நிதிப்பற்றாக்குறை காரணமாக கிரவல் வீதியாக மாறியுள்ளதால் இவற்றினூடாக போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் கிரவல் வீதிகளை மீண்டும் தார்வீதிகளாக அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, சேதமடைந்த வீதிகளின் மதிப்பீட்டு அறிக்கை, ஆய்வறிக்கை உட்பட ஏனைய விபரங்களை அனுப்பி வைக்கும்படி சகல பிரதேசசபை செயலாளர்களையும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோரியுள்ளார்.

# குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம் —

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள குளங்களும், வாய்க்கால்களும் புனரமைக்கப்படவுள்ளன.

உலக உணவுத் திட்டத்தின்கீழ் சங்கானை கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கராய்ச்சி வாய்காலும், அராலி மத்தியிலுள்ள நாகப்புல குளமும் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான வேலைத் திட்டங்கள் வலி.மேற்குப் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பகுதியால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதேவேளை, நியாப் திட்டத்தின் கீழ் அராலி பெரியகுளமும் புனரமைக்கப்படவுள்ளது.

# நீண்ட காலமாகத் திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம் —

நீர்வேலி - கரந்தன் பூதர்மடம் வீதி பலமாதங்களாக கற்கள் குவிக்கப்பட்டுள்ள போதிலும் திருத்த வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கரந்தன் - பூதர்மடம் வீதி கடந்த பல ஆண்டுகளாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக இருந்தமையால் மக்கள் போக்குவரத்து செய்யமுடியாதிருந்தது.

இதையடுத்து, கரந்தன்- பூதர்மடம் வீதியை புனரமைப்பதற்கு கற்கள் குவிக்கப்பட்டு ஐந்து மாதங்களாகியும் அந்த வீதி திருத்தப்படவில்லை. வீதிஓரத்தில் குவிக்கப்பட்டுள்ள கற்கள் வீதியில் சிதறிக்கிடப்பதால் அந்த வீதியூடாகப் போக்குவரத்து செய்வதில் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, மேற்படி வீதியை திருத்தி மக்கள் போக்குவரத்துக்கு உதவுமாறு அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் - பாடசாலைசார் சமூக உளவியல் மற்றும் சுகாதாரத் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்திவரும் அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச்சங்கம் - இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையூடாக விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கவுள்ளது.

விளையாட்டு மைதானத்துக்கான இடஅமைப்பு, பரப்பளவு, விளையாட்டு மைதானத்தின் புகைப்படம் தேவையான உபகரணங்கள் பற்றிய விபரங்களை அனுப்பி வைக்கும்படி திட்ட அலுவலர் ம.இளங்கோ சம்பந்தப்பட்ட சகல பிரிவுகளுக்கும் அறிவித்துள்ளார். (21)

# தாளையடி அந்தோனியார் வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம் —

தாளையடி புனித அந்தோனியார் ஆலயவருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நாளை மாலை திருப்பலியும், தேவநற்கருணை சுற்றுப்பிரகாரமும் நடைபெறவுள்ளது. மறுநாள் காலை 7 மணிக்கு திருநாள்திருப்பலியும், திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் நடைபெறும்.

தினமும் மாலைத் திருப்பலியின்போது மண்டைதீவு - அல்லைப்பிட்டி பங்குத்தந்தை அருட்திரு அமல்ராஜ் அடிகளார் மறையுரையாற்றுகிறார்.

திருவிழாவுக்கான ஒழுங்குகளை தாளையடி பங்குத் தந்தை அருட்திரு எஸ்.அன்ரனிதாஸ் அடிகளார், உதவிப் பங்குத் தந்தை அருட்திரு நேசன் அடிகளார் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். (21)

# காவலரண் மீது தாக்குதல் இரு படையினர் காயம்!

மன்னார் —

மன்னார்-சூரியகட்டைக்காட்டில் இராணுவக் காவலரண் மீது நேற்று முன்தினம் காலை நடத்தப்பட்ட தாக்குதலில் இரு படையினர் காயமுற்றனர்.

நேற்றுமுன்தினம் காலை 7.10 மணியளவில் மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் மூலம் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இரு படையினர் உடனடியாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, தாக்குதலுக்குள்ளான காவலரணில் இருந்த படை யினருக்கு உதவ நானாட்டான் இராணுவ முகாமிலிருந்து விரைந்த படையினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.


உ

தில்லையம்பதியாள் துணை

## கோண்டாவில் தில்லையம்பதியில் இன்று தீர்த்தத்திருவிழா

9 மணிக்கு வசந்தமண்டப பூஜை , 10 மணிக்கு பூரணைத் தீர்த்தமாடல்

### தீர்த்தமாடினாள் சிவகாமி

ராகம் : சுருட்டி — தாளம் : ஆதி

பல்லவி

தீர்த்தமாடினாள் சிவகாமி - தில்லையம்பதியில்
தீர்த்தோம் தீர்த்தோம் தீவினை
திருவருள் தந்தோ மென்று

அனுபல்லவி

ஆர்த்திடும் சிலம்பொலிக்க
அணிமார்புக் கச்சணிந்து
போர்த்திடு மென் பட்டுடுத்தி
புதுப்புனல் நீர் தெளித்து

சரணம்

வைகாசிப் பூரணையில் வளமார நிழலில்
தைலாதி மஞ்சளுடன் தண்மலர்ப்பன் னீர்குளித்து
கைலாச நாதன் தில்லை கண்ணுதலான் தாள் நினைந்து
ஐயா சிவனே என்று அம்மைமனம் குளிர்ந்து

ஆலரசு மேடையில் அமர்ந்து கூந்தல் உலர்த்தி
தூபப்புகை கூந்தலேற்றி துகில் மடிச்சேலை கட்டி
ஆபரணாதிகள் பூண்டு அருள் திலகமுமிட்டே
ஆனந்தத் தொண்டருக்கே அருள் அள்ளித் தரும் அன்னை

எம்பிராட்டி திருத்தொண்டர் தம்பி ஐயா தனைப்பூ ஜிக்க
கோண்டாவில் தில்லையம்பதியில் அருள் தந்தாய் சிவகாமி
வெம்பித் தொழுது பக்தர் கும்பிட்டடி பணிய
அன்பரைக் காக்க அருள் அள்ளித் தரும் சிவகாமி



இயற்றியவர் : பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்
பாடியவர் : ரி.எம்.எஸ்.செல்வகுமார்.

தில்லையம்பதி — பரிபாலனசபை

அம்பிகை தொலைத்தொடர்பகம்,
ஓடியோ - வீடியோ றெக்கோடிங் ஸ்பொட்,
குமரகோட்டம் வீதி, தில்லையம்பதி, கோண்டாவில்.
தொ.இல. 021 222 5845

[C/5394]


# தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனையில் இரு தமிழ் இளைஞர்களை கடந்த வியாழக்கிழமை படையினர் கைது செய்தனர்.

கிரானைச் சேர்ந்த ஆறுமுகம் சுச்சானந் (வயது 22), சந்தி வெளியை சேர்ந்த நடராசா அருளானந்தராசா (வயது 19) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடந்த வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் முறக்கொட்டாஞ்சேனையில் இருந்து, கிரானை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவர்களை முறக்கொட்டாஞ்சேனை காவலரணில் வழிமறித்த படையினர் கைது செய்துள்ளதாக தெரிய வருகிறது.

கைது செய்யப்பட்ட இருவரையும் படையினர் நேற்றுமுன்தினம் மாலை ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

12 அடி நீளமும், 6 1/2 அடிச் சுற்றும் கொண்ட கருங்கல் ஒன்றும், வேறு துண்டுக்கற்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு - ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி தேவஸ்தானம்,முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணை,யாழ்ப்பாணம். (C/5395)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகள் மீதான தடையை கண்டித்து ஐரோப்பாவில் கறுப்புப்பட்டி போராட்டம்

கொழும்பு—

தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்ததைக் கண்டித்து- நாளை முதல் 16 ஆம் திகதிவரை கறுப்புப்பட்டி அணிந்து கவனஈர்ப்பு போராட்டம் நடத்த ஐரோப்பியவாழ் தமிழர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எமது தாயக விடுதலைப்போரை அனைத்துலக உதவியுடன் நெருக்கடியில் தள்ளி, அதனை இல்லாதொழிக்கும் கைங்கரியத்தை சிங்களப் பேரினவாத அரசு முன்னெடுத்து வருகிறது.

குறிப்பாக, அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் எமது ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளை தடைசெய்ததும் இந்த முயற்சியின் வெளிப்பாடே.

சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து இலங்கைத் தீவில் சிங்களவர்களால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளை மறந்தும், கடந்த 50 வருடங்களாக தமிழ் மக்கள் உரிமை கேட்டு போராடி வருவதைத் தட்டிக் கழிக்கும் இந்தச் செயற்பாட்டுக்கெதிராக புலம்பெயர் தமிழ் மக்களாகிய நாங்கள் எமது ஒற்றுமையையும், உணர்வையும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

கடந்த 29 ஆம் திகதி உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் பெருமளவில் திரண்டு தமது உரிமைக்குரலை ஓங்கி ஒலிக்கச்செய்ததும், எமது மக்களின் ஒற்றுமையுணர்வை மீண்டுமொரு முறை நிலைநாட்டியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

என்றென்றும் ஈழவிடுதலைப் போர் வெல்ல உரமூட்டும் நாங்கள்- கடந்த நான்கு வருட சமாதானத்தில் எமது உரிமைகளை இழந்தும், அல்லைப்பிட்டி போன்ற படுகொலைகளை சகித்துக்கொண்டும் வாழ்வது எமது விதியல்ல.

எனவே, ஐரோப்பிய ஒன்றியம் எமது ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை தடைசெய்ததற்கு அதிருப்தி தெரிவிக்கும் முகமாக நாளை தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை கறுப்புப்பட்டி அணிந்து எமது கண்டனத்தைத் தெரிவிக்கும் கவனஈர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அதேபோன்று, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க கோருமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை வலியுறுத்தும் தபால் அட்டைகளை- ஐரோப்பிய ஒன்றியம், தங்கள் நாட்டு வெளிநாட்டு அமைச்சு என்பவற்றுக்கு அனுப்பி தங்களின் வேண்டுகோளை அழுத்திச் சொல்வதோடு- அந்தக்காலப்பகுதியில் கோவில்கள், தேவாலயங்களில் எல்லாத் தடைகளையும் தாண்டி எமது விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவேண்டி நடைபெறும் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளுமாறும் ஐரோப்பிய தமிழர் பேரவை ஐரோப்பா வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் வேண்டுகிறது.

பல வருடமாக புலம்பெயர்ந்த தமிழ்மக்களாகிய நாம் எமது விடுதலைப் போருக்கு உரமூட்டும் வண்ணம் உழைத்தே வந்துள்ளோம். அதேபோல் உலகின் மனச்சாட்சியை உறுத்தும்வரை எமது இந்த கவனஈர்ப்பு போராட்டத்தை நிகழ்த்துவோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தச் செயற்பாடு எமது உறவுகளின் உயிர்களுக்கு விலைகூறும் சக்திகளுக்கு வாய்ப்பாக அமைந்து விடுவதோடு, இலங்கைத் தீவின் சமாதானத்துக்கு சாவுமணி அடித்துவிடும் அபாயம் குறித்தும் அவர்களிடம் கூறுவோம்.

தடைகளை தாண்டுவோம்! விடுதலைக்கு வழிசமைப்போம்! என்று ஐரோப்பிய தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# சிப்பாயும் சிறுவனும் கிரனேட் வீச்சில் காயம்

திருகோணமலை—

திருகோணமலை - புல்மோட்டை வீதியில் அலஸ்தோட்டம் அகதி முகாமுக்கு அண்மையில் நேற்றுமாலை மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவச் சிப்பாயும், சிறுவன் ஒருவரும் காயமடைந்தனர்.

நேற்றுமாலை 5 மணியளவில் புல்மோட்டை வீதியூடாக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை இவர்கள் மீது மறைந்திருந்து கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. காயமடைந்த இராணுவச் சிப் பாய் திருகோணமலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் மோகனதாஸ் சந்திரன் (வயது 11) என்ற சிறுவனே காயடைந்தவராவார். (10,4)

# அரச தரப்பு இன்று நாடு திரும்புகிறது

கொழும்பு—

ஒஸ்லோ பேச்சுவார்த்தைக்குச் சென்ற அரசு தரப்பு பிரதிநிதிகள் இன்று நாடு திரும்பவுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒஸ்லோவில் கண்காணிப்புக் குழு தொடர்பான பேச்சுவார்த்தை முறிந்த பின்னரும் - விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்ற நம்பிக்கையில் அரசதரப்பு பிரதிநிதிகள் தங்கியிருந்தபோதும், அந்த நம்பிக்கை வீணாகப் போனதாக அரச சமாதான செயலக பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார்.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர் -

சமாதான நடவடிக்கையில் அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து சமாதானத்தை நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

போர்நிறுத்த உடன்பாடிக்கையிலிருந்தோ, சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்தோ அரசாங்கம் விலகப் போகவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வங்காலைப் படுகொலைகள்; ரகசியப் பொலிஸ் விசாரணை!

கொழும்பு—

மன்னார் - வங்காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கண்டறிவதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கவிருப்பதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் படையினராலேயே . மேற்கொள்ளப்பட்டதாக விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டியுள்ள போதும் இராணுவப் பேச்சாளர் அதனை மறுத்துள்ளார்.

# இந்தோனேசியாவில் தங்கியிருந்த 107 இலங்கையர்கள் கைது

ஜகார்த்தா—

இந்தோனேஷியாவில் 107 இலங்கையர்கள் சட்டவிரோதமாக தங்கியிருந்தபோது கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த வியாழக்கிழமை சுற்றுலா நகரான சிசாரோவில் உள்ள இரண்டு வீடுகளில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர். இதன்போதே 107 இலங்கையர்கள் அங்கிருந்து கைதுசெய்யப்பட்டனர்.

இது தொடர்பாக இந்தோனேஷியாவின் குடிவரவு திணைக்கள இயக்குனரான முகமட் இந்ரா தகவல் வெளியிடுகையில் -

பிடிபட்ட அனைவரும் ஒரு மாதத்துக்கு முன்னர் இந்தோனேஷியாவுக்குள் பிரவேசித்தனர். கொழும்பிலும் ஜகார்த்தாவிலும் உள்ள குழுவினரால் இவர்களுக்கு வியாபார விசாக்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது.

வேறு நாட்டுக்கு கூட்டிச் செல்வதற்காகவே இவர்கள் இந்தோனேஷியாவுக்கு கொண்டுவரப்பட்டனர். ஆட்களைக் கடத்துவதற்கான ஒரு நிலையமாக சில குழுவினர் இந்தோனேஷியாவை ஒரு தளமாகப் பயன்படுத்துகின்றனர்.

பிடிபட்டவர்களிடம் விசாரணை நடத்தியபோது அவர்கள் தொழிலற்ற தனி நபர்கள் என்றும், இவர்கள் இந்தோனேஷியாவுக்கு வருவதற்கான தகுந்த காரணத்தைத் தெரிவிக்கவில்லை.

இதேவேளை, இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது - மேற்படி விடுதியில் தங்கியிருந்து பிடிபடாமல் தப்பித்த மேலும் 43 பேரைத் தேடும் நடவடிக்கை பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தனர்.

பிடிபட்ட எஸ்.பிரபாகரன் என்ற இலங்கையர் 'டெய்லி கொம்பாஸ்' என்ற பத்திரிகைக்கு தகவல் வெளியிட்டபோது - தாம் கொழும்பிலுள்ள இந்தோனேஷிய தூதரகத்தில் விசா பெற்றே சட்டபூர்வமாக இந்தோனேஷியாவுக்குள் நுழைந்ததாகத் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் வன்முறைகள் அதிகரிக்கத் தொடங்கியதாலேயே தாம் அங்கிருந்து வெளியேறி சிங்கப்பூரில் தொழில் தேட முயன்றதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

# போக்குவரத்து அச்சுறுத்தல்; கண்காணிப்புக்குழுவில் புகார்!

திருகோணமலை—

திருகோணமலை நகருக்கும் மூதூருக்கும் இடையில் தமிழ் மக்களின் போக்குவரத்து நடவடிக்கைகள் அச்சுறுத்துலுக்கு உள்ளாகியிருப்பது குறித்து திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி .எழிலன் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

தரைவழியாகவும், கடல்வழியாகவும் திருமலைக்கும் மூதூருக்கும் இடையே பயணம் மேற்கொள்ளும் தமிழர்களை படையினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவினரும் அச்சுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, மூதூரிலிருந்து திருமலைக்குச் சென்ற இரு பயணிகள் நேற்று பிற்பகல் சுட்டுக்கொல்லப்பட்டதையும் தனது முறைப்பாட்டில் எழிலன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மூன்று சடலங்கள் அனுராதபுரத்தில் மீட்பு

கொழும்பு—

அநுராதபுரம் - விஜிதபுர மல்வத்து ஓயா பாலத்துக்கு அருகில் மூன்று சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

பொலிஸாரால் மீட்கப்பட்ட இந்தச் சடலங்கள் ரயர் போட்டு எரிக்கப்பட்ட நிலையில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூன்று நபர்களும் வேறு இடங்களில் கொலை செய்யப்பட்ட பின்னர் இந்தப் பகுதியில் வைத்து ரயர் போட்டு எரிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## படையினர் கிளைமோர்...

குடியிருப்புப் பகுதியில் இடம் பெற்ற இந்தத் தாக்குதலில், தளபதி லெப். கேணல் மகேந்தி (இராசு மகேந்திரன் - கெருடாவில் சாவகச்சேரி) மற்றும் லெப். குட்டிமணி, லெப். இளங்கோ, லெப். கலைமாறன் ஆகியோரே வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

1986 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளியாக இணைந்துக்கொண்ட லெப். கேணல் மகேந்தி -

1987 - 1988 காலப்பகுதியில் தென்மராட்சியில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தியவர்.

1989 இல் மணலாற்றில் சினைப்பர், ஆர்.பி.ஜி., லோ போன்ற கனரக ஆயுதங்களில் சிறப்புப் பயிற்சிபெற்று தென்மராட்சிப் பகுதிக்குத் திரும்பிச் சென்று இந்திய இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தியவர்.

1990 இல் இவர் கவசப் படைப் பிரிவுக்குப் பொறுப்பாகச் செயற்பட்டார்.

இராணுவம் யாழ்.குடாநாட்டை 1996 இல் கைப்பற்றிய பின்னர் யாழ்.குடாநாட்டில் குழுக்களாகவும், தனியாகவும் இராணுவத்துக்கு எதிராகப் பல தாக்குதல்களை நடத்தியவர் லெப்.கேணல் மகேந்தி.

1998 இல் யாழ்.செல்லும் படையணியின் தளபதியாக இருந்து பல தாக்குதல்களை நடத்தினார்.

2000 ஆம் ஆண்டு யாழ். செல்லும் படையணியுடன் வன்னி திரும்பிய இவர் - கட்டைக்காடு, மாசார், முகாவில் போன்ற பகுதி களில் ஊடறுப்புச் சமர்களில் பங்கு பற்றியவர்.

2001 ஆம் ஆண்டு மணலாற்றுப் பகுதியில் துணைப்படைத் தளபதியாகச் செயற்பட்டார்.

தற்போது மன்னார் மாவட்ட முறியடிப்பு நடவடிக்கை தளபதியாகச் செயற்பட்டவர் லெப்.கேணல் மகேந்தி என்பது குறிப்பிடத்தக்கது.

தளபதி லெப்.கேணல் மகேந்தியின்வித்துடல்இன்று காலை 9 மணியளவில் பளையிலும், மாலை 3 மணியளவிலும் கிளிநொசசி பண்பாட்டு மண்டபத்திலும் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்பட்டு -

மாலை கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

## போர்நிறுத்தக்...

அத்துடன், கடந்த காலத்தில் போர் நிறுத்தத்தை அமுல்படுத்துவதில் கண்காணிப்புக்குழு காத்திரமான பணியை வகித்ததாகவும் பௌச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கை...

நோர்வே புதிதாக எந்த நகர்வையும் மேற்கொள்ளாது. இரு தரப்பும்தான் பேச்சுக்களை முன்னெடுப்பது பற்றிய யோசனைகளைத் தெரிவிக்க வேண்டும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தொடர்பான தமது முடிவை புலிகள் மாற்றிக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

புலிகள் சமாதானப் பேச்சுக்களில் இருந்து விலகிவிட்டதாக உணரவில்லை. அவர்கள் அரசியல்ரீதியான பதிலை எதிர்பார்க்கிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இரு தமிழ்...

துப்பாக்கியால் சுட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் ஒருவர் திருகோணமலை புறநகர் பகுதியான மனையாவெளியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை ரவிச்சந்திரன் (வயது - 43) என அடையாளம் காணப்பட்டார்.

இதேவேளை, சுட்டுக்கொல்லப்பட்ட 12 வயதுச் சிறுவன் அடையாளம் காணப்படவில்லை.

திருமலை - புறநகர் பகுதியான அலஸ்தோட்டத்தைச் சேர்ந்த பரந்தாமன் என்பவர் படுகாயம டைந்தார் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியான புளியடிச் சந்தியில் இடம்பெற்றது. அந்தப் பகுதியில் இராணுவத்தின் சிறு முகாம்களும், காவலரண்களும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## படையினரின்...

வாவிக்கரையிலிருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குத லில் தமது போராளி பலியானதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். எனினும், இதனை இராணுவம் மறுத்துள்ளது.

## தொடர்ச்சியான...

இராணுவக் கட்டுப்பாட்டில் வாழுகின்ற மக்கள் அச்சத்துடனே வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது சமாதான முயற்சிகளை முன்னெப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தும், வன்செயல்கள் குறைந்ததாகத் தெரியவில்லை.

இதேவேளை, சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என நோர்வேயால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் எதனையும் இரு தரப்பினரும் சரியாக கருத்தில் எடுக்கவில்லை.

சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கு இரு தரப்பினருமே புதிய யோசனைகளை முன்வைக்க வேண்டும்.

ஒவ்வொரு தடவையும் நோர்வே தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் கட்டுப்பாட்டுப்...

இந்தக் கிளைமோர்த் தாக்குதலில் வாகனம் ஒன்று மயிரிழையில் தப்பியது.

இந்தப் பகுதியில் ஆழ ஊடுருவும் அணியினரால் கிளைமோர் குண்டுகள் 5 பொருத்தப்பட்டிருந்ததாகவும், ஒரு கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்ட நிலையில் ஏனைய நான்கும் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, வவுனியா வடக்கு நெடுங்கேணி - ஒலுமடுவில் நிகொட் நிறுவன மாவட்ட துணைப் பணிப்பாளர் சென்ற வாகனம்மீது ஆழஊடுருவும் இராணுவ அணியினரால் நேற்றுக்காலை 10.30 மணியளவில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் வாகனம் சேதமானது. அதில் பயணித்தவர்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

நெடுங்கேணியில் நிகொட் திட்ட நடவடிக்கைகளை பார்வையிட்டு திரும்பியபோது இந்த கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

அண்மைய நாட்களாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவத்தினரின் ஆழஊடுருவும் அணியினரின் கிளைமோர்த் தாக்குதல்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.